விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 307 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 05 புதன்கிழமை (22.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## நாடு முழுவதும் 36,178 ஆசிரியர் வெற்றிடங்கள்

### பாராளுமன்றத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

இலங்கை முழுவதும் உள்ள மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளில் மொத்தம் 36 ஆயிரத்து 178 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாக, கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதில் தேசிய பாடசாலைகளில் ஆயிரத்து 501 வெற்றி

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.குருநகர் இறங்குதுறையிலிருந்து சிறிய படகில் இந்தியா பயணித்த செவ்வந்தி

### நடுக்கடலில் மூழ்கிவிடுவேனோ என அழுது புலம்பினேன்

### விசாரணையில் அனுபவத்தை வெளிப்படுத்திய இஷாரா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் இறங்குதுறையிலிருந்து சிறிய மீன்பிடிப் படகில் இந்தியாவுக்குப் பயணித்தேன்.

நடுக்கடலில் மூழ்கிவிடுவேனோ என அழுது புலம்பினேன் என இஷாரா செவ்வந்தி தனது விசாரணையில் தெரிவித்துள்ளார்.

கணேமுல்ல சஞ்சீவ கொலையின் முக்கிய சூத்திரதாரியான இஷாரா செவ்வந்தி கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

16ஆம் பக்கம் பார்க்க

## - பாதாளக்குழுவினர் தப்ப முடியாது -

# செவ்வந்திக்கு உதவிய அனைவரும் சிறை செல்வர்



### நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

(கொழும்பு)

பாதாள உலகக் குழுவிடம் தொடர்புடைய எவரும் தப்பமுடியாது. செவ்வந்திக்கு உதவிய அனைவரும் சிறையில் அடைக்கப்படுவர் என நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் மார்க்க)

## நாவற்குழியில் விபரீத முடிவெடுத்த யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் விபரீத முடிவெடுத்த யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பிறந்து 25 நாட்களான சிசு மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பிறந்து 25 நாட்களேயான ஆண் சிசு ஒன்று நேற்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

ஆதித்தியன் கிருஷானிவி என்ற

15ஆம் பக்கம் பார்க்க

## வசாவிளானில் தனியார் காணியில் அமைக்கப்படும் இராணுவ வைத்தியசாலை

### விரைவில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

### நேரில் பார்வையிட்ட பின் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வசாவிளான் பகுதியில் உள்ள தனியார் காணியில் எவ்வித அனுமதியுமின்றி அமைக்கப்படும் இராணுவ வைத்தியசாலைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வசாவிளானில் உயர் பாதுகாப்பு வலயம் என இராணுவத்தினரால் கையகப்படுத்தி வைத்திருக்கும் தனியார்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் செவ்வந்திக்கு உதவிய 7 பேர் இதுவரை கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இஷாரா செவ்வந்திக்கு உதவி செய்த 7 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வுட்லர் தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான கணேமுல்ல சஞ்சீவ,

15ஆம் பக்கம் பார்க்க

## ஆறுகால்மடத்தில் கசிப்புடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியில் 21 போத்தல் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## மழையுடனான காலநிலை தொடரும்

## சீரற்ற வானிலையால் சுமார் 8 ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

வடமாகாணம் உட்பட நாடு முழுவதும் மழையுடனான காலநிலை தொடரும்.

சீரற்ற வானிலை காரணமாக 6 மாவட்டங்களில் 2 ஆயிரத்து 52 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 346 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 335 ஆகும்.

இதற்கிடையில் அவிசாவளை

02ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்ட மக்கள் பொலிஸாரின் அவசர சேவையைப் பெற்றுக் கொள்ள

### 021 222 2221 இலக்கம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரை மையமாகக் கொண்ட பொலிஸாரின் விசேட சேவையொன்று நேற்று செவ்வாய்க்கிழமை முதல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

போக்குவரத்துப் பிரச்சினைகள் மற்றும் சிறு குற்றங்கள்


15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணத்தினைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் Green-Layer சுற்றுச்சூழல் அமைப்பின் கிளிநொச்சிக்கான புதிய அலுவலகம் A9 வீதியில் கிளிநொச்சி பேருந்து நிலையத்திற்கு முன்பாக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அவர்களினால் கடந்த 18.10.2025 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் முரளிதரன், கிளிநொச்சி மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி வடக்கு கல்வி வலய கல்விப்பணிப்பாளர் சிவனருள்ராஜா மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வைத்தியர்கள், இயற்கை ஆர்வலர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். இதன்போது இயற்கைக்கு வணக்கம், சுற்றுச்சூழல் தொடர்பான சத்தியப்பிரமாணம் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றதோடு வன்னிப் பெருநிலப்பரப்பில் மரநடுகையில் ஈடுபட்டு சாதனை படைக்கும் இயற்கை ஆர்வலர்களும் கௌரவிக்கப்பட்டனர்.


## வேலையாட்கள் தேவை

கொழும்பில் அலுமினிய Fitting வேலைத் தளத்திற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

1. Casement Windows
2. 100mm Slliding Door
3. Kitchen Cupboards

சுயமாக செய்யக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்
மாதச் சம்பளம் 80,000/=

தொடர்பு : 077 879 6620

(C-322)

## பணியாளர் தேவை

தனியார் நிலையம் ஒன்றிற்கு 2 பெண் பணியாளர்கள் தேவை. நிரந்தரமாக பணியாற்றக் கூடிய, அண்மையில் இருப்பவர் அல்லது இலகுவான போக்குவரத்து வசதி உள்ளவர் விரும்பப்படும்.

241, யாழ் - பருத்தித்துறை வீதி, நாவலர்மடம், நெல்லியடி.

இயக்குநர் - 077 914 3171

(C-4158)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வழங்குநர்களை பதிவு செய்தல் - 2026

எமது சபையினால் 2026 ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்குத் தங்களை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருட்கள்**

01. காகிதாதிகள் எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. நூலகங்களுக்கான நூல்கள்
05. துணி வகைகள்
06. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
07. கற்கள், மணல்கள்
08. தீந்தை வகைகள் (Paints) நிறம் தீட்டும் பொருட்கள்
09. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
11. மின்வழங்கு பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள்
12. எரிபொருள்,உராய்வு நீக்கி
13. இரும்புப் பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள் ,சட்டங்கள்
15. பனைமரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. கணினி பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருள்கள், கிருமி நாசினிகள்
19. பாதணிகள், தோல் பொருட்கள், மழை அங்கிகள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல், பதாதைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
02. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்,ரயர் மாற்றுதல்
04. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
05. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
06. மின்சாதனங்களின் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
07. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
08. வாகனங்கள் சுத்திகரிப்பு
09. கோலவுடை தைத்தல்
10. கணினி பிரதியாக்கல், இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
12. வீதி கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை

மேற்படி விண்ணப்பமானது ஒவ்வொரு பொருட்கள் மற்றும் வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் Pachchilaipalli.ps.gov.lk இணையத்தளத்திலும் மற்றும் தலைமையலுவலக முகப்பு அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் குறித்த சேவைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற போது ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் விண்ணப்பபடிவக் கட்டணமாக ரூபா.1000.00 உம் ஒவ்வொரு பொருட்கள் மற்றும் வழங்கல் சேவைக்குமான பதிவுக் கட்டணமாக ரூபா.1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2026"** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **தவிசாளர், தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பபடிவங்கள் 31.12.2025 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 024 -3243544 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

(C-4159)

## சீரற்ற...

மடோல பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் பெய்த கனமழையின் மத்தியில் பயிற்சி வகுப்புகளில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது, வடிகாலில் விழுந்து சுமார் 80 மீற்றர் தூரத்திற்கு நீரில் அடித்துச் செல்லப்பட்ட 17 வயது மாணவி நேற்று உயிரிழந்தார்.

இன்று (22) நாட்டின் பல மாகாணங்களில் 150 மி.மீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி அடுத்த 12 மணி நேரத்திற்குள் மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென் மற்றும் வடக்கு மாகாணங்களிலும், அநுராதபுரம் மாவட்டத்தின் சில இடங்களிலும் 150 மி.மீ.இற்கு மேல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் கனமழையால், நாட்டின் பல முக்கிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதுடன், தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் பல பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் தொடர்ந்து திறக்கப்பட்டுள்ளன.

(ம-7)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் உத்தியோகம் பார்க்கும் மூவர் அடங்கிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. குறைந்த வாடகை விரும்பத்தக்கது.

077 008 3491
077 967 2613

(5705)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து தட்டுப்பாடு என்று மக்களிடையே வீண் அச்சத்தை ஏற்படுத்த முயற்சி

## சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளுக்குத் தடையின்றி மருந்துகளை விநியோகிப்பதற்கும், மருந்துப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மருந்து தட்டுப்பாடு என்று மக்கள் மத்தியில் வீண் அச்சத்தை ஏற்படுத்த ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள் எனச் சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழான 2446/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் மருந்து பற்றாக்குறை நிலவுவதாகக் குறிப்பிட்டார்.

களுத்துறை மாவட்டத்தில் பிரதான மூன்று அரச வைத்தியசாலைகள் உள்ளன. அங்கு இவர்கள் குறிப்பிடுவதைப் போன்று பாரதூரமான வகையில் மருந்து தட்டுப்பாடுகள் ஏதும் காணப்படவில்லை.

சட்டத்தின் பிரகாரம் மருந்துகளின் தரம் மற்றும் மருந்து விநியோகம் தொடர்பில் ஆராயும் பொறுப்பு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இந்த அதிகார சபைகளில் பல பிரச்சினைகள் காணப்பட்டன. அத்துடன் சுகாதார அமைச்சும் ஊழல் மிகுந்ததாகக் காணப்பட்டது. தற்போது அவ்வாறான நிலைமை இல்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மருந்துகள் பரிந்துரை மீளாய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பொருட்களின் பட்டியலுடன் தொடர்புடையதாக விசேட வைத்திய நிபுணர்கள் சங்கங்களைக் கொண்ட ஒரு குழுவினால் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

அதன்படி ஆண்டின் இறுதிக் காலாண்டில் நிறுவனங்களில் இருந்து பெறப்படும் வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அடுத்த ஆண்டின் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் 11 மாதக் காத்திருப்புக் காலத்துடன் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்கு மருந்து விநியோகப் பிரிவு ஊடாக அனுப்பல் கட்டளைகள் வழங்குவதே பொதுவான நடைமுறையாகும்.

மருந்து கொள்வனவை வினைத்திறனாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரச வைத்தியசாலைகளுக்கு தடையின்றி மருந்துகளை விநியோகிப்பதற்கும், மருந்துப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மருந்து தட்டுப்பாடு என்று மக்கள் மத்தியில் வீண் அச்சத்தை ஏற்படுத்த ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். மருந்துகளின் தரம் மற்றும் விநியோகத்தை சீராக்கும் பொறுப்பு சுகாதார அமைச்சுக்கு உண்டு. இந்தப் பொறுப்பை சிறந்த முறையில் செயற்படுத்துவோம் என்றார்.

(ம-7)

# இறக்குமதியாகும் வாகனங்களின் விலைகளில் வீழ்ச்சி

(கொழும்பு)

ஜப்பானில் வாகன விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை 15 இலட்சம் ரூபாய் வரை குறைந்துள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரின்சிகே தெரிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்படாத வாகன இறக்குமதிகள் உள்ளூர் சந்தையில் பதிவு செய்யப்படாத வாகனங்களின் தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மெரின்சிகே ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி தரவுகளின் படி, 2025 ஜனவரி மற்றும் ஓகஸ்ட்டுக்கு இடையில் தனிப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக 705 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் விலை மாற்றங்களின் பின்னர், பதிவு செய்யப்படாத ஹோண்டா வெசல் இசட்ப்ளே 2025 எஸ்யூவி இப்போது 23.5 மில்லியன் ரூபாய்களுக்கு விற்கப்படுகிறது. இது 25.5 மில்லியனில் இருந்து குறைந்துள்ளது.

டொயோட்டா யாரிஸ் 11.5 மில்லியனில் இருந்து 10.5 மில்லியன் ரூபாய்களாக குறைந்துள்ளது. அதே நேரத்தில் சுசுகி அல்டோ ஹைப்ரிட் இப்போது 7.9 மில்லியனில் இருந்து 7.3 மில்லியனாகக் குறைந்துள்ளது.

சுசுகி வேகன் ஆர் விலையும் 7.8 மில்லியனில் இருந்து 7.3 மில்லியன் ரூபாய்களாக குறைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

(நி)

# 43 இலட்சம் குடும்பங்கள் அஸ்வெசும கோருகின்றனர்

(கொழும்பு)

இலங்கையின் மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 52 இலட்சம் எனவும் இதில் 43 இலட்சம் குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை பெற்றுக்கொள்ள விண்ணப்பம் செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் உபாலி பன்னல இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த 2024 ஆம் ஆண்டில் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் நாட்டில் 52 இலட்சம் குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதில் 43 இலட்சம் குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரித் திட்டத்திற்காக விண்ணப்பம் செய்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பெரும்பாலானவர்கள் உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற மன நிலையில் வாழ்ந்து வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையானது நாட்டின் பொருளாதாரத்தை மட்டுமன்றி மக்களின் உளச் சுகாதாரத்தையும் பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலில் நிலவி வந்த ஓர் கலாசாரமும் இவ்வாறு மக்கள் உதவி பெறும் நிலைக்கு தள்ளப்படுவதற்கான ஏதுவாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் மற்றும் அரசியல்வாதிகளினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த நிலைமைக்கு தீர்வு காணப்படாவிட்டால் அது இலங்கையை முன்னோக்கி நகர்த்துவதில் பெரும் நெருக்கடிகளை உருவாக்கக்கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(நி)

# சடுதியாக அதிகரித்துள்ள அரிசியின் விலை

(கொழும்பு)

இலங்கையில் கீரி சம்பா அரிசியின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தையில் ஒரு கிலோ கிராம் கீரி சம்பா அரிசியின் விலை 350 ரூபாவாக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோ கிராம் கீரி சம்பாவின் மொத்த விற்பனை விலை 300 முதல் 325 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோ கிராம் கீரி சம்பா அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை 260 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்ட போதிலும் அந்த விலைக்கு விற்பனை செய்ய முடியாது என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யமுடியாத வர்த்தகர்கள் பழக்கமான வாடிக்கையாளர்களுக்கு மட்டும் கூடுதல் விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பற்றுச்சீட்டு எதுவுமின்றி இவ்வாறு கீரி சம்பா அரிசி விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோ கிராம் கீரி சம்பா அரிசி விற்பனையின் மூலம் 25 முதல் 30 ரூபா வருமானம் கிடைக்கப் பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(நி)

## சர்வதேச நாணய நிதியத்திடம் பெற்ற

# பெரும் கடன் பட்டியலில் 13 ஆவது இடத்தில் இலங்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடம் அதிகப்படியான தொகையைக் கடனாகப் பெற்று, அதைத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை 13 ஆவது இடத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி உலகெங்கிலும் உள்ள 86 நாடுகள் மொத்தமாக சுமார் 162 பில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச நாணய நிதியத்துக்கு செலுத்த வேண்டியுள்ளது.

இதில், இலங்கை செலுத்த வேண்டியுள்ள தொகை 2.3 பில்லியன் அமெரிக்க டொலராகும்.

இலங்கையைக் காட்டிலும் பாகிஸ்தான், ஈக்குவடோர், ஐவரி கோஸ்ட், கென்யா, பங்களாதேஷ், கானா, அங்கோலா, கொங்கோ மற்றும் கோஸ்டா ரிக்கா ஆகிய நாடுகளும் அதிகப்படியான கடனை சர்வதேச நாணய நிதியத்துக்கு செலுத்தவேண்டியுள்ளன.

எனினும் இந்தக் கடன் பட்டியலில் ஆர்ஜென்டினா முதலிடத்தில் உள்ளது.

அந்த நாடு 56.83 பில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச நாணய நிதியத்துக்குச் செலுத்த வேண்டியுள்ளது. (நி)

# ஹிக்கடுவையில் துப்பாக்கிச் சூடு!

(கொழும்பு)

ஹிக்கடுவ, மாவதகம பகுதியில் உள்ள ஒரு வீட்டை இலக்கு வைத்து நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறதுடன் துப்பாக்கிச் சூட்டில் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

ஆனால் சுமார் 4 துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டதாகவும், வீட்டின் மதில் மற்றும் ஜன்னல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மேலும் சம்பவம் குறித்து ஹிக்கடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

# சதீஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் வசம்!



தீவக உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் புங்குடுதீவு சென் சேவியர் விளையாட்டுக் கழகம் நடத்திய அமரர் சதீஸ் ஞாபகார்த்த கிண்ண மாபெரும் உதைபந்தாட்ட போட்டியில் புங்குடுதீவு நசரேத் அணியை வீழ்த்தி அல்லைப்பிட்டி சென்பிலிப்ஸ் அணி சம்பியனைக் கைப்பற்றியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற அணிக்கு 7 பேர் கொண்ட இறுதிப் போட்டியில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணி 6:2 என்ற கோல் கணக்கில் புங்குடுதீவு நசரேத் அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்று அமரர் சதீஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (3)

# மகளிர் உலகக்கிண்ணத் தொடரில் பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை




13 ஆவது மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடை பெற்ற 21 ஆவது லீக் ஆட்டத்தில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதின. நவி மும்பையில் நடை பெற்ற இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை 48.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 202 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஹாசினி பெரேரா 85 ஓட்டங்கள் எடுத்தார்.

பங்களாதேஷ் தரப்பில் அந்த அணியின் ஷர்னோ அக்தர் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.


இதையடுத்து 203 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணி ஆரம்பம் முதலே இலங்கை பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்டுகளை தாரைவார்த்தது. இருப்பினும் ஷார்மின் அக்தர் - நிகார் சுல்தானா இணை சிறப்பாக ஆடி பங்களாதேஷ் அணிக்கு நம்பிக் கையை அளித்தது.

ஆனால் அவர்கள் ஆட்டமிழ ந்ததும் பங்களாதேஷ் தோல்வியின் பிடியில் சிக்கியது. 50 ஓவர்கள் விளையாடிய பங்களாதேஷ் அணி யால் 9 விக்கெட்டுகளை இழந்து 195 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந் தது.

இதன் மூலம் இலங்கை 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் தரப்பில் நிகார் சுல்தானா 77 ஓட்டங்களும், ஷார்மின் அக்தர் 64 ஓட்டங்களும் எடுத்தனர். இலங்கை தரப்பில் அத்தபத்து 4 விக்கெட்டுகள் வீழ்த் தினார். இலங்கை வீராங்கனை ஹாசினி ஆட்ட நாயகியாக தேர்வு செய்யப்பட்டார். (3)

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய தலைவரானார் அப்ரிடி




பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவராக முகமது ரிஸ்வான் செயற்பட்டு வந்தார். இந்த நிலையில் அவரை நீக்கிவிட்டு அப்ரிடியை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் புதிய அணித்தலைவராக நியமித்து உள்ளது.

தலைவர் பதவியில் இருந்து ரிஸ்வான் நீக்கப்பட்டதற்கான காரணம் குறித்து எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை. அணியின் பயிற்சியாளர் மைக் ஹெசன், தேர்வுக்குழு உறுப்பின ர்கள் உள்ளிட்டவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்க ப்பட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் -தென் ஆபிரிக்கா இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமாகிய நிலையில் ரிஸ்வான் நீக்கப்பட்டு உள்ளார். அப்ரிடி யும் இந்த டெஸ்டில் ஆடி வருகி றார்.

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் தென் ஆபிரிக்கா டெஸ்ட் தொடருக்கு பிறகு மூன்று 20 ஓவர் ஆட்டத்திலும், 3 ஒரு நாள் போட்டிகளிலும் விளை யாடவுள்ளது.

ஒரு நாள் தொடர் நவம்பர் 4 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த தொடரில் 25 வயதான வேகப்பந்து வீச்சாளர் ஷகீன்ஷா அப்ரிடி தலை வராக செயற்படுவார் என அறிவிக்கப் பட்டுள்ளது. (3)

## 2 ஆவது ரி-20 தொடர்

# நியூசிலாந்தை வீழ்த்தி இங்கிலாந்து அபார வெற்றி!




இங்கிலாந்து கிரிக் கெட் அணி நியூசிலா ந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20 மற்றும் மூன்று ஒரு நாள் போட்டி களில் விளையாடுகி றது. இதில் இவ் விரு அணிகளுக்கு இடையே முதலில் ரி-20 போட்டி நடை பெறுகிறது. அதன்படி கிறைஸ்ட் சர்ச்சில் கடந்த 18 ஆம் திகதி நடந்த முதலாவது ரி-20 போட்டி மழை யால் பாதியில் கைவிடப்பட்டது.

இதனையடுத்து நியூசிலாந்து-இங்கிலாந்து இடையிலான 2 ஆவது ரி-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டு இழப்புக்கு 236 ஓட்டங்கள் குவித்தது. அதிக பட்சமாக அதிரடியாக விளையாடிய பில் சால்ட் 85 ஓட்டங்களும், ஹாரி புரூக் 78 ஓட்டங்களும் எடுத்தனர். நியூசிலாந்து தரப்பில் ஜேமிசன் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து 237 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. அந்த அணி 18 ஓவர்களில் 171 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. இதன்மூலம் இங்கிலாந்து அணி 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 ஆவது மற்றும் இறுதி ரி-20 போட்டி நாளை வியாழக்கிழமை ஆக்லாந் தில் நடைபெறவுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்புக்களை பயன்படுத்தி மோசடி

## தேசிய லொத்தர் சபை எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் அதிகாரபூர்வ லோகோ மற்றும் பரிசு விநியோக நிகழ்வுகளை பயன்படுத்தி மோசடி செய்யப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான போலி பேஸ்புக் கணக்குகள் குறித்து தேசிய லொத்தர் சபைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற மோசடி வணிகங்களில் ஈடுபட வேண்டாம் என தேசிய லொத்தர் சபை பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

தேசிய லொத்தர் வாரியத்தின் லொத்தர் சீட்டு ஒவ்வொரு நாளும் இரவு 9.30 மணிக்கு சுயாதீன தொலைக்காட்சி சேவையில் அதிகாரபூர்வமாக நடைபெறும்.

மேலும் அதன் மறு ஒளிபரப்புக்கள் தேசிய லொத்தர் வாரியத்தின் அதிகாரபூர்வ பேஸ்புக் கணக்கு மற்றும் சுயாதீன தொலைக் காட்சி சேவையின் அதிகாரபூர்வ யூடியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

கூடுதலாக அதிகாரபூர்வ லொத்தர் முடிவுகள் லக்கண்ட வானொலி மற்றும் வசந்தம் FM சேனல்களில் ஒளிபரப்பப்படும்.

மேலும் வலம்புரி, தினமின், சிலுமின, டெய்லி நியூஸ், தினகரன், வாரமஞ்சரி ஆகிய செய்தித்தாள்கள் மூலம் அச்சு ஊடகங்களில் அதிகாரப் பூர்வமாக வெளியிடப்படும்.

மேலே பட்டியலிடப்பட்டுள்ள சேனல்களுக்கு மேலதிகமாக தேசிய லொத்தர் சீட்டுக்களைப் பயன்படுத்தி போலி குலுக்கல் மற்றும் போலி சமூக ஊடகங்கள் நடத்தப்படுவது குறித்த தகவல் உங்களிடம் இருந்தால் தயவு செய்து அதை ஒரு தேசியப் பொறுப்பாகக் கருதி 011 460 7000 என்ற எண் மூலம் தெரியப்படுத்துமாறு தேசிய லொத்தர் சபை கேட்டுக் கொண்டுள்ளது. (நி)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி.டயானா ஆனந்தராஜா அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர். பரமு மகேந்திரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

(C-457)

# பதவிகளை துறக்கவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர்களாக போட்டியிடுவதற்காக சுமார் பத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் பதவி விலகல் செய்யத் தயாராகி வருவதாக அரசியல் வட்டாரங்களில் தகவல் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஆண்டில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக, முதலமைச்சர் வேட்பாளர் பதவியைப் பெறுவதற்காக பல அரசியல் கட்சிகளுக்கு இடையே தற்போது போட்டி நிலை உருவாகியுள்ளது.

அதன்படி, இந்தப் பதவிகளில் ஆர்வமுள்ளவர்களில் பெரும்பாலானோர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவ்வாறு போட்டியிட விரும்பும் முதலமைச்சர் வேட்பாளர் பதவியை தங்களுக்கு வழங்குமாறு தொடர்புபட்ட கட்சித் தலைவர்களிடம் அவர்கள் ஏற்கனவே தனிப்பட்ட முறையில் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஆளுநரை சந்தித்து கலந்துரையாடிய இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பிலான முன்மொழிவு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன் ஆசிரிய ஆளணிச் சீராக்கம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

ஆசிரியர்கள் தொடர்பான தரவுகள் அதிகாரிகளிடம் இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படாமை பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணமாக இருக்கின்றது என்றும் ஆசிரிய சங்கத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றம் தொடர்பிலும் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (நி-8)

# அரச நிகழ்நிலை சேவைகள் வழமைக்கு திரும்பின

(கொழும்பு)

பாதிக்கப்பட்டிருந்த அரச திணைக்களங்களின் நிகழ்நிலை சேவைகள் முழுமையாக வழமைக்குத் திரும்பியுள்ளதாக இலங்கை தகவல் தொடர்பு தொழில்நுட்ப முகவரகம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், பொதுமக்கள் எந்தவித இடையூறுகளும் இன்றி அவற்றைப் பயன்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தால் தரவு பாதுகாப்புக்கு எவ்வித சிக்கலும் ஏற்படவில்லை என இலங்கை தகவல் தொடர்பு தொழில்நுட்ப முகவரகம் தெரிவித்துள்ளது. (நி)

# இராசிபலன்

22.10.2025
ஐப்பசி 05, புதன்கிழமை
பிரதமை முன்னிரவு 7.34 மணிவரை

சுவாதி பின்னிரவு 1.51 மணிவரை
சுப நேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

கந்தசஷ்டி விரதாரம்பம்
சந்திராஷ்டமம்: உத்திரட்டாதி, ரேவதி

வளவன்


மேஷம்


தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.


கடகம்


வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வாகன சுகமுண்டு, தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், நணபர்கள் சந்திப்புண்டு.


துலாம்


தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், செலவிற்கேற்ப வருமானம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


மகரம்


பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், கனவுகள் நனவாக இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.


ரிஷபம்


உடல் நலன் சீராகும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.


சிம்மம்


செல்வாக்கு மேலோங்கும் நாள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.


விருச்சிகம்


காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், உறவினர்களின் சந்திப்புண்டு, சுப விரயங்கள் கூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மேன்மையடைய வேண்டிய நாள்.


கும்பம்


வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.


மிதுனம்


தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


கன்னி

உடல் நலன் சீராகும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


தனுசு

தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும்.


மீனம்

குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

சிந்தனையில்லாமல் முன்னேற்றம் இருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா வைத்தியசாலை படுகொலை 38 ஆவது ஆண்டு நினைவேந்தல்



(அராலி)

யாழ்.போதனா வைத்தியசாலையினுள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய இராணுவத்தினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட வைத்தியர்கள் உள்ளிட்ட 68 பேரின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நினைவேந்தல் நிகழ்வில் வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட வைத்தியசாலை சமூகத்தினர் மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டதுடன், மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நோயாளிகளுக்கு சக்கர நாற்காலிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21, 22 ஆம் திகதிகளில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய அமைதிப்படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் வைத்தியசாலையில் கடமையில் இருந்த மூன்று மருத்துவர்கள், இரண்டு தாதியர்கள், மேற்பார்வையாளர் உள்ளிட்ட 21 மருத்துவ சேவையாளர்கள் மற்றும், சிகிச்சை பெற்று வந்த 47 நோயாளர்கள் என 68 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் பலர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-33-104)

# விசேட சுற்றிவளைப்பில் 29 பேர் கைது




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வார காலப்பகுதியில் 29 பேர் யாழ்ப்பாண பொலிஸாரினால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 45 போத்தல் கசிப்பு, கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள், 90 லீற்றர் கோடா, சாராயம் மற்றும் போதைப்பொருட்கள் என்பவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கைது செய்யப்பட்டவர்களில் 11 பேர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (8-33)

# தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் 37 ஆக காணப்பட்ட பொதுக்கிணறுகளுடைய எண்ணிக்கை தற்போது 21ஆக குறைவடைய காரணம் என்னவென நகரசபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் இக் கேள்வியினை எழுப்பியிருந்தனர். இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

சபை எல்லைக்குள் காணப்படுகின்ற தொல்பொருள் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாப்பதுடன் நகரசபைச் சொத்துக்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக சபை எல்லைக்குள் காணப்படுகின்ற சுமைதாங்கிகள், பொதுக் கிணறுகள் மற்றும் பொதுமலசலகூடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அண்மைக்காலமாக இவ்வாறான மரபுரிமைச் சின்னங்களை அழிக்கின்ற மற்றும் தனியாரின் சொத்துக்களுடன் இணைக்கின்ற செயற்பாடுகள் பல சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இடம்பெற்றுள்ளன.

சபை எல்லைக்குள் 37 பொதுக் கிணறுகள் காணப்பட்ட நிலையில் தற்போது 21 கிணறுகளே காணப்படுகின்றன. அவற்றை பேணிப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதுடன் காணாமல் போன பொதுக் கிணறுகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சில பொதுக்கிணறுகள் தனியார் காணிகளுடன் இணைக்கப்பட்டு இடித்து மூடப்பட்டுள்ளன.

எனவே நகரசபை விரைந்து நடவடிக்கை எடுத்து தனது சொத்துக்களை அடையாளப்படுத்தி பாதுகாப்பதுடன் தனியாரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுச் சொத்துக்களையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்திருந்தனர். (8-30)

# ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)


மாங்குளம் சுற்றுலா நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட மணல் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாங்குளம் சுற்றுலா நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 300 | 300 | 180 - 200 | 120 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 250 | -- | 210 |
| பச்சைமிளகாய் | 250 | 220 | 200 | 300 | 220 | 200 |
| தக்காளி | 300 | 240 | 200 | 300 | 220 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 300 | 160 | 200 | 80 |
| கோவா | 200 | 200 | 250 | 200 | 140 | 140 |
| கரட் | 250 | 250 | 250 | 300 | 200 | 190 |
| பூசணி | 80 | 60 | 80 | 80 | 50 | 28 |
| புடோல் | 300 | 250 | 300 | 300 | -- | -- |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 160 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-300 | 250 | 300 | 150-220 | 210 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 200 | 165 | 100 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 600 | 550 | 250 |
| வெண்டக்காய் | 150 | 250 | 150 | 300 | 200 | 110 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 200 | 300 | 200 | 220 |
| பயற்றங்காய் | 350 | 400 | 400 | 600 | 550 | 300 |
| லீக்ஸ் | 250 | 230 | 250 | 300 | 180 | 185 |
| பீற்றூட் | 160 | 120 | 180 | 160 | 100 | 100 |
| கறிமிளகாய் | 300 | 450 | 400 | 400 | 420 | 280 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 300 | 200 | 150 | 150 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 500 | 350 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 200 | 250 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 60-140 | 150 | 120 | -- | -- |
| தேசிக்காய் | 1500 | 1400 | 2000 | 1400 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 180 | 150-200 | -- | 150 |
| இராசவள்ளி | 800 | 900 | 600 | 800 | 800 | 775 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | 450 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 100 | 200 | -- | 60 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 100 | 60 | -- | 35 |
| வல்லாரை | 80 | 50 | 80 | 80 | -- | 40 |
| [illegible] | 160 | 150 | 100 | 200 | -- | -- |

# நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உதவிப் பிரதேச செயலாளர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு புதிய உதவிப் பிரதேச செயலாளராக இராமலிங்கம் சிவகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்றைய தினம் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் தமக்கான நியமனக் கடிதத்தினைப் பெற்றுக் கொண்டார்.

இவர் முன்னர் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உதவிச் செயலாளராக கடமையாற்றியிருந்தார். இன்றைய தினம் நல்லூர் பிரதேச செயலகத்தில் தனது கடமையினை பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரதக் கடவையின்மையால் போக்குவரத்தில் இடர்பாடு

## பேசாலை மக்கள் தெரிவிப்பு

(மன்னார்)

**மன்னார் பேசாலை வடக்கு மற்றும் பேசாலை தெற்கு பகுதிகளை பிரிக்கும்வகையில் அமைந்துள்ள புகையிரதத் தடத்தினை கடந்து பயணிப்பதற்கு ஒரேயொரு புகையிரதக்கடவை மாத்திரம் காணப்படுவதால் பேசாலை மக்கள் பலத்த போக்குவரத்து இடர்பாட்டினை எதிர் நோக்கிவருகின்றனர்.**



இந்நிலையில் அப்பகுதி மக்களின் முறையீட்டிற்கு அமைய வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடந்த 14 ஆம் திகதி அன்று குறித்த பகுதிக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.


குறிப்பாக பேசாலை வடக்கு மற்றும் பேசாலை தெற்கு பகுதிகளைப் பிரிக்கும் புகையிரத தடத்தினை கடப்பதற்கு ஒரேயொரு புகையிரதக்கடவை காணப்படுவதால் பேசாலை தெற்குப் பகுதியிலிருந்து பாத்திமா மத்திய மகாவித்தியாலயம், சென்மேரிஸ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு வருகைதருகின்ற 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் நீண்டதூரம் பயணம் செய்து பாடசாலைக்குச் செல்லவேண்டியுள்ளது.

அத்தோடு பொதுமக்களும் பலத்த போக்குவரத்து நெருக்கடிகளுக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே இந்தப் போக்குவரத்து நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு பேசாலை பாப்பரசர்வீதியில் புகையிரதக்கடவை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பேசாலைக்கிராமத்தில் சீரின்றிக் காணப்படுகின்ற உள்ளக வீதிகளைச் சீரமைத்து தருமாறும் பேசாலை கிராம மக்கள் ரவிகரன் எம்.பியிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில் பேசாலை மக்களின் கோரிக்கைகளை மற்றும் குறைபாடுகளைக் கேட்டறிந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமெனத் தெரிவித்திருந்தார். (8)

# சாவகச்சேரியில் திருவள்ளுவர் சிலை திறந்து வைப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி சிலுவம் - செல்வவிநாயகர் சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் திருவுருவச்சிலை அண்மையில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

சனசமூக நிலையத்தின் தலைவர் க.விஜயவாசன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், மதகுரு, சாவகச்சேரி நகராட்சி மன்ற சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெகதீஸ்வரன் செல்வராணி, சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கனகசபை கஜீதன், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அமரர்களான அதிபர் கோவிந்தபிள்ளை மற்றும் கோ.இராசநாயகம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்களுடைய மகன் கோ.சிறிகாந்தனால் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# ஓவிய புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நக்கா வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது கலா முற்றத்தில் எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் ஓவிய புகைப்படக் கண்காட்சி காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த சிறப்புக் கண்காட்சியில், பொது வைத்திய நிபுணர் டாக்டர் ஸ்ரீ விக்கினேஸ்வரன் கேதீஸ்வரனின் ஓவியங்களும், சுயாதீனக் கலைஞர் தவ. தஜேந்திரனின் சமகாலக் காண்பிய வெளிப்பாடுகளின் நிழற்பிரதிகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மேலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் 175 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வரலாற்றுக் குறிப்புகள், தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களின் நிழற்படங்கள் பாலசுப்பிரமணியம் துவாரகனால் தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட உள்ளன.

அத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓவியங்களும் புகைப்படங்களும் விற்பனைக்கு வைக்கப்படவுள்ளன. அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

## மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின்

# வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடு மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வாகன வருமானவரி அனுமதிப் பத்திரம் வழங்கும் செயற்பாட்டில் வலையமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக கடந்த 10.10.2025 தொடக்கம் 20.10.2025 வரை மேல்மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வாகன வருமானவரி அனுமதிப் பத்திரம் வழங்கும் செயற்பாடு தடைப்பட்டிருந்தது. எனினும் தற்போது சீராக்கப்பட்ட வாகன வருமானவரி அனுமதிப் பத்திரம் வழங்கும் குறித்த செயற்பாடு நேற்றைய தினம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு வாகன வருமானவரி அனுமதிப் பத்திரம் முடிவடையும் திகதிக்கு 60 நாட்களுக்கு முன்னரே புதுப்பிக்க முடியும் என்பதனையும் அறியத் தருகின்றேன் என வட மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார். (8)

# யாழ்.கோட்டையைச் சுற்றி எல்லைக்கற்கள்; ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றி எல்லைக் கற்கள் நடுகை செய்யும் பணி தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தொல்பொருள் திணைக்களத்தால் எல்லைக் கற்கள் நடுகை செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அது நிறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் நேற்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

தொல்பொருட் திணைக்களம், யாழ்.மாநகர சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து எஞ்சிய எல்லைக் கற்களை நடுகை செய்யும் பணிகளை முன்னெடுப்பது என இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் - காணி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், யாழ்.மாநகர சபையின் பொறியியலாளர், தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.




யாழ்ப்பாணம், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ கட்டமைப்பை யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா உள்ளிட்ட குழுவினருக்கு, திண்மக்கழிவு முகாமைத்துவ கட்டமைப்பின் தொழிற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்தனர். (படம்- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாரதம்

## எரிவாயுக் கப்பலில் தீ விபத்து
## பணியாளர்கள் பாதுகாப்பாக மீட்பு



(ஏமன்)

ஏமன் நாட்டின் ஏடன் துறைமுகத்திற்கு அருகில் நடுக்கடலில் சென்ற எரிவாயு சரக்குக் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து, அதில் சிக்கியிருந்த அனைத்துப் பணியாளர்களும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கேமரூன் நாட்டுக் கொடியுடன் இயங்கும் "எம்.வி. பால்கன்" என்ற இந்தச் சரக்குக் கப்பல், ஏமன் துறைமுகத்திலிருந்து சரக்கை இறக்குமதி செய்த பின்னர், ஜிபோட்டியின் கடற்படை தளத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது.

ஏமன் நாட்டின் ஏடன் துறைமுகத்திலிருந்து தென்கிழக்கே சுமார் 113 கடல் மைல் தொலைவில் கப்பல் சென்று கொண்டிருந்தபோது, திடீரென வெடிப்புடன் தீ விபத்து ஏற்பட்டது. மசகு எண்ணெய் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டாலும், கப்பலில் திரவ பெட்ரோலிய வாயு ஏற்றப்பட்டிருந்ததாக ஐரோப்பிய ஒன்றியத்தின் கடற்படை மிஷன் தெரிவித்துள்ளது.

இந்தத் தீ விபத்தில் கப்பலில் சுமார் 15 சதவீதம் எரிந்ததுடன், கப்பலில் மேலும் வெடிப்பு ஏற்படும் அபாயம் இருந்ததால், ஏனைய கப்பல்கள் பாதுகாப்பான தூரத்தில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

விபத்து குறித்து தகவல் அறிந்த ஜிபோட்டியின் கடற்படை பாதுகாப்புப் படையினர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடற்படைப் பாதுகாப்புக் குழுமத்தினர் உடனடியாக மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கப்பலில் பணியில் இருந்த இந்திய மாலுமிகள் 23 பேர் உட்பட மொத்தம் 26 பேர் கொண்ட குழுவினரில், அருகிலுள்ள வணிகக் கப்பல்களின் உதவியுடன் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

மீதமுள்ளவர்களில் ஒருவர் காணாமல் போனதாக முதலில் தகவல் வெளியான நிலையில், தற்போது அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஏமனின் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் பகுதியில் சரக்குக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்திவரும் நிலையில், இந்த விபத்து தொடர்பாகக் குழப்பம் நீடித்தது.

இருப்பினும், ஆரம்பகட்ட தகவல்களின்படி, இந்தச் சம்பவத்தில் ஏவுகணைகளோ அல்லது ஆளில்லா விமானங்களோ பயன்படுத்தப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றும், இது ஹவுதி இலக்குகளுடன் பொருந்தவில்லை என்றும் பிரிட்டனின் கடல்சார் பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது.

ஹவுதி குழுவும் இந்தச் சம்பவத்துக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை எனத் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் ஏடன் வளைகுடா கடற்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# வர்த்தக ஒப்பந்தம் செய்ய
# —சீனாவுக்கு ட்ரம்



(வோஷிங்டன்)
சீன ஜனாதி
அமெரிக்காவுடன்
வர்த்தக ஒப்பந்தத்தி
விட்டால், சீனா 15
வரிகளை எதிர்கொ
அமெரிக்க ஜன
எச்சரிக்கை விடுத்து

அமெரிக்க வெள்ளை மாளிகையில் அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் உடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, ஜனாதிபதி ட்ரம்ப் கூறியதாவது, சீனா மீது அமெரிக்கா மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டது.

ஆனால் தனது நிர்வாகம் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை பொறுத்துக்கொள்ளாது.

சீனா எங்களை மிகவும் மதிக்கிறது என்று நான் நினைக்கிறேன். அவர்கள் 55 சதவீத வரிகளை செலுத்துகிறார்கள் என்பது உங்களுக்கு தெரியும். இது நிறைய பணம். தற்போது அவர்களுக்கு புதிய வரிகளை விதிக்கலாம்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அமெரிக்காவுடன் ஒரு நியாயமான வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட விட்டால், நவம்பர் 1ஆம் திகதி முதல் சீனா 155 சதவீதம் வரை வரிகளை எதிர்கொள்ள நேரிடும். அமெரிக்கா புதிய ஏற்றுமதி தடைகளை விதிக்கும்.

மலேசியாவில் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கியுள்ள நிலையில், சீனா பொறுப்புடன் செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் பல நாடுகள் அமெரிக்காவை சாதகமாக

## ஜப்பானில் முதல் பெண் பிரதமராக
## சனே டகாய்ச்சி தெரிவு

(டோக்கியோ)

ஜப்பானில் முதல் பெண் பிரதமராக சனே டகாய்ச்சி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடுமையான போட்டிக்கு மத்தியில், செய்தி வாசிப்பாளராக இருந்து அரசியல்வாதியாக மாறி, அரசாங்கத்தின் உயர் பதவிகளில் பணியாற்றிய சனே டகாய்ச்சி ஜப்பானில் ஆளும் லிப்ரல் ஜனநாயகக் கட்சியின் தலைமைப் பதவியை வென்றுள்ளார்.


ஜப்பான் பாராளுமன்றத்தில் தன்னுடன்



போட்டியிட்ட 4 வேட்பாளர்களையும் தோற்கடித்து இப்பதவியை அவர் வென்றுள்ளார்.

ஜப்பானில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மை இழந்ததை அடுத்து, பிரதமர் ஷிகெரு இஷிபா தமது பதவியை அண்மையில்

இராஜின
இந்நிலை
யின் புதி
அமைச்ச
(64) தே
டார்.
தேர்த
தொடர்ந்
லிபரல்
கட்சியி
தலைவர்
கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ய்யாவிட்டால் 155% வரி

# ரம்ப் எச்சரிக்கை—

**டன்)** ••••••••••••••

**ாதிபதி ஜி ஜின்பிங்**
**ன் ஒரு நியாயமான**
**த்தில் கையெழுத்திடா**
**155 சதவீதம் வரை**
**கொள்ள நேரிடும் என**
**னாதிபதி ட்ரம்ப்**
**த்துள்ளார்.**



ின்பிங் யமான ழுத்திடா ி முதல் ரிகளை கா புதிய .

பேச்சு கியுள்ள செயற்பட ரில் பல தகமாக

பயன்படுத்திக் கொண்டன, ஆனால் அந்த சகாப்தம் முடிந்துவிட்டது. அவர்களால் இனி சாதகமாகப் பயன்படுத்த முடியாது என ட்ரம்ப் தெரிவித்தார்.

மேலும், இஸ்ரேல் உடனான போர் நிறுத்தத்தை ஹமாஸ் நிலைநிறுத்த வேண்டும்.

நல்லவராக இருங்கள் இல்லையெனில் நீங்கள் அழிக்கப்படுவீர்கள். வன்முறை விளைவுகளை எதிர்கொள்ள வேண்டும்.

வன்முறை குறையும் என்ற நம்பிக்கையில் அமெரிக்கா போர் நிறுத்தத்திற்கு ஒரு சிறிய வாய்ப்பு கொடுக்கும். ஆனால் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தினால் பதிலடி கொடுப்போம்.

ஹமாஸ் அமைப்பு ஆயுதங்களை களைவதாக உறுதியளித்தது. ஆனால் காலக்கெடு நிர்ணயிக்கப்படவில்லை.

ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், அவர்கள் செய்ய வேண்டியதைச் செய்யாவிட்டால், நாங்கள் அதைச் செய்ய வேண்டியிருக்கும். இவ்வாறு ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார். (நி)

## டொனால்ட் ட்ரம்பின் ஆசைப்படி இடிக்கப்படும் வெள்ளை மாளிகை



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் நீண்ட நாள் ஆசையான அமெரிக்க வெள்ளை மாளிகையின் ஒரு பகுதியை இடிக்கும் பணிகள் தொடங்கியுள்ளன.

அமெரிக்காவின் அடையாளமாகவும், அந்நாட்டு ஜனாதிபதிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க இல்லமாகவும் வெள்ளை மாளிகை உள்ளது.

இந்த மாளிகையின் கிழக்குப் பகுதி கட்டடம் 1902ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

ட்ரம்ப் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், வெள்ளை மாளிகையின் ஒருபகுதி இடிக்கப்பட்டு போல்ரூம் (ballroom) அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

இது அவரின் கனவு என்பதோடு நீண்ட நாள் விருப்பம் ஆகும். அவரின் ஆசையைப் பூர்த்தியாக்கும் விதத்தில் அதற்கான கட்டுமானப் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

இந்த போல்ரூம் (ballroom) ரூ.2200 கோடி செலவில் அமைக்கப்படுகிறது.


இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ட்ரம்ப் "நாட்டின் ஒவ்வொரு ஜனாதிபதியும், வெள்ளை மாளிகை வளாகத்தில் மிகப் பிரமாண்ட விருந்துகள், கலைநிகழ்ச்சிகளுக்காக மக்களைத் தங்க வைக்க ஒரு போல்ரூம் வேண்டும் என்று 150 ஆண்டுகளுக்கும் மேலாகக் கனவு கண்டு வந்தனர்.

இந்த நிலையில் வரி செலுத்துவோருக்கு எந்த சிரமும் இன்றி, இந்த கனவை செயற்படுத்திய முதல் ஜனாதிபதி நான் என பெருமைப்படுகிறேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

இராஜினாமா செய்தார். இந்நிலையில், அக்கட்சி ின் புதிய தலைவராக அமைச்சர் சனே டகாய்ச்சி 64) தேர்ந்தெடுக்கப்பட் ார்.

தேர்தலில் வெற்றியைத் தொடர்ந்து சனே டகாய்ச்சி ிபரல் ஜனநாயகக் ட்சியின் அதிகாரபூர்வ லைவராக பதவி ஏற்றுக் கொண்டதுடன் இதையடுத்து, அவர் பிரதமராக தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அதன்படியே சனே டகாய்ச்சி பிரதமராக தெரிவு செய்யப்பட்டார்.

அதன்படி வெற்றிபெற்ற அவர் விரைவில் ஜப்பான் நாட்டின் 104ஆவது பிரதமராக பதவி ஏற்கவுள்ளார். (நி)



## 16,000 ட்ரோன்களின் வானவேடிக்கை கின்னஸ் உலக சாதனை படைத்த சீனா

(பீஜிங்)


கிட்டத்தட்ட 16,000 ட்ரோன்களின் வான வேடிக்கை நிகழ்ச்சியுடன் சீனா கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் சீனாவில் ட்ரோன்கள் மூலம் வானவேடிக்கை நிகழ்ச்சி இடம்பெற்று வருவது வழக்கம்.

வண்ண வண்ண நிறங்களுடன் அழகிய வடிவில் ட்ரோன்கள் மூலம் பொருட்கள் காட்சிப்படுத்தப்படுகின்றது.

அதற்கமையவே 2025 ஆம் ஆண்டுக்கான வான வேடிக்கை நிகழ்ச்சிகளை கிட்டத்தட்ட 16,000 ட்ரோன்கள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் மரம், பூ உள்ளிட்ட இயற்கை வடிவங்கள் பல வகையான வண்ண நிறங்களுடன் வானில் மின்னுமளவில் காட்சிப்படுத்தப்பட்டன.

இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்ட வானவேடிக்கை உலகளவில் அனைவரையும் ஈர்த்து கின்னஸ் சாதனையில் இடம்பிடித்துள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா
## படுகொலையின் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தினரால், யாழ். போதனா வைத்தியசாலையில் சுட்டு படுகொலை செய்யப்பட்டவர்களது 38 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்றைய தினம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக் கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு இந்திய இரா ணுவம் யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து வைத்தியசாலையில் கட மையாற்றிய வைத்தியசாலை பணியா ளர்கள் 21 பேர் உள்ளிட்ட 68 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட துடன் பலரும் காயமடைந்த் னர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் 38 ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது. இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களது உறவினர்கள் கலந்துகொண்டனர்.

குறித்த நினைவேந்தலில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்தோருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு உயி ரிழந்தவர்களின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது. (8-104-33)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி-பா-26 3/4
7இல்சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC(QS), QS (Dubai)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16158

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி-பா-27
உயரம்:5'3"
தகைமை/தொழில்-Engineering, work(pvt)
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16160

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
12இல் செவ்
கி-பா- 28 1/4
உயரம்:5'9"
தகைமை/தொழில்:BBM,Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16161

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்:பரணி
12இல் செவ்
உயரம்:5'9"
தகைமை/தொழில்: Swiss
எதிர்பார்ப்பு: PR உள்ளவர் (Swiss)
தொ.இ: B/16163

பிறப்பு: 1982- இந்து
நட்சத்திரம்-உத்தரட்டாதி
கி-பா-10
12இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: A/L,கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16164

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bsc, Teacher
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Teacher
தொ.இ: G/14590

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்-பூசம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Network Telecom Engineer (London)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14593

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்-விசாகம்
கி.பா -67
தகைமை/தொழில்: BA (following))
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14596

பிறப்பு -1994 -இந்து
நட்சத்திரம் - அத்தம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: College, Teacher
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: G/14222

பிறப்பு - 1991 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
7இல் செவ்
கிபா- 15
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: London.
எதிர்பார்ப்பு - வெளிநாடு UK மட்டும்.
தொ.இ: G/15030

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 465



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பொய் சொல்லும் குழந்தைகள்!

"அது ஒரு குழந்தை சார் அதற்குப் பொய் சொல்லத் தெரியுமா?" என்று சொல்வது உண்டு. ஆனால் மனோதத்துவ நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

நான்கு வயது அல்லது அதற்குக் கொஞ்சம் முன்னாடியே கூட குழந்தைகள் பொய் சொல்ல ஆரம்பித்துவிடுமாம்! சமீபத்திலே சில ஆராய்ச்சியெல்லாம் செய்து பார்த்துவிட்டு இதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்பா - அம்மா கொஞ்சம் கவனமாக இருந்தால் குழந்தைகள் பொய் சொல்ல வேண்டிய அவசியமே வராது!

ஒரு குழந்தை ஒரு சின்னபொம்மையை வைத்து விளையாடிக் கொண்டு இருக்கும் .கைதவறி அந்த பொம்மை கீழே விழுந்து உடைந்து போகிறது. உடனே அந்தக் குழந்தை அம்மாவிடம் போகிறது."அம்மா... அந்தப் பொம்மையை நான் கீழே போட்டு உடைத்துவிட்டேன்" என்றது. உடனே அந்த அம்மா குழந்தையை திட்டுகிறார்கள் அல்லது அடிக்கிறார்கள். "ஏன் பொம்மையை உடைத்தாய்?" என்று சொல்லி! இப்போது அந்தக் குழந்தை யோசிக்க ஆரம்பிக்கிறது. ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறது.

உண்மையைச் சொன்னால் அம்மா திட்டுவார் போல என்று நினைக்குது. அடுத்த தடவை அப்படி ஒரு பொம்மையை அது உடைத்துவிட்டால் அதை அம்மாவிடம் சொல்லாமல் மறைத்துவிடுகிறது அல்லது "பொம்மையை நான் உடைக்கவில்லை. அம்மா... பூனை தள்ளி விட்டுட்டுது!" என்று பொய் சொல்ல ஆரம்பித்துவிடுகிறது. குழந்தைகள் பொய் சொல்ல ஆரம்பிக்கின்ற சந்தர்ப்பம் இதுதான்.

"பொம்மையை உடைத்துவிட்டேன்" என்று குழந்தை சொன்னால் உடனே கோபப்படாதீர்கள். உங்கள் அதிர்ச்சியைக் காட்டாதீர்கள். ஏன் உடைத்தாய்? என்று திட்டாதீர்கள், அடிக்காதீர்கள்! அந்த சமயத்திலே சாதாரணமாக இருங்கள். "அப்படியா?" என்று கேளுங்கள். அதன்பின் பொம்மையை எப்படி கவனமாக வைத்துக் கொண்டு விளையாட வேண்டும் என்பதைப் பற்றி புத்திமதி சொல்லுங்கள் அதுதான் நல்லது.

ஒரு குழந்தை நம்மிடம் பொய் சொல்லும் போது அதனுடைய நடவடிக்கை எப்படி இருக்கும் என்பதைப் பற்றிக்கூட நிபுணர்கள் சில குறிப்புகளைச் சொல்லியிருக்கிறார்கள்! பொய் சொல்கின்ற குழந்தை நம்மளை நேருக்கு நேராக பார்த்துப் பேசுவதற்குத் தயங்குமாம்! குரலிலே ஏற்றத்தாழ்வு இருக்குமாம்! முன்னுக்குப் பின் முரணாக பேசுமாம்! சின்ன வயதிலே தான் இப்படி.

ஆனால் கிட்டத்தட்ட 11 வயதுக்கு மேலே இந்த அறிகுறியெல்லாம் இல்லாமல் ரொம்பத் திறமையாக பொய் பேச ஆரம்பித்து விடுவார்களாம். பிள்ளைகளிடம் நாம் ரொம்ப ஜாக்கிரதையாக நடந்துக்க வேண்டிய காலம் எது தெரியுமா? இரண்டு கட்டத்திலே நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். முதல் கட்டம். மூன்றிலேயிருந்து நான்கு வயது வரைக்கும். அந்தச் சமயத்திலே குழந்தைக்குப் பொய் பேசத் தெரியாது.

குழந்தைகள் திட்டமிட்டுப் பொய் பேசத் தெரியாத பருவம் அது! அந்தச் சமயத்திலே குழந்தைகளிடம் நாம் சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும்! மாலை பொம்மை வாங்கித் தருகின்றேன் என்று சொன்னால் சொன்னபடி செய்துவிட வேண்டும்! இரண்டாவது காலகட்டம் டீன்ஏஜ் ஆரம்பம். அதாவது 13-14 வயது.

இந்த சமயத்திலே ரொம்பப் பிரமாதமாகப் பொய் சொல்ல ஆரம்பித்துவிடுவார்களாம். பொய் சொல்கிறோமே என்கின்ற குற்ற உணர்ச்சியே அவர்களுக்கு ஏற்படுவதில்லை! அது பழகிப் போய்விடும். இதுமாதிரி சமயத்திலே பிள்ளைகளிடம் நாம் ரொம்ப நட்பாகப் பழக வேண்டும். நம் பெயரிலே அவர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். குழந்தைகளைப் பொறுத்த வரைக்கும் நாம் எந்தந்த அளவுக்கு அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்கிறோம் என்பதும் முக்கியம்!

நாம் எந்த அளவுக்கு அவர்கள் சுதந்திரத்திலே தலையிடாமல் இருக்கிறோம் என்பது அதைவிட முக்கியம்!

ஒரு பள்ளிக்கூடம். ஒரு வயதானவர் அங்கே வந்தார். தலைமை ஆசிரியரின் அறைக்குப் போனார். நான்காம் வகுப்பு படிக்கின்ற பாலுவைப் பார்க்க முடியுமா? என்றார். "பாலு உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் தலைமை ஆசிரியர். "பாலு என்னோட பேரன்" என்றார் பெரியவர். கொஞ்சம் உட்காருங்கள் என்று சொல்லிவிட்டு. அட்டெண்டரை கூப்பிட்டு "நாலாம் வகுப்புக்குப் போய் பாலு என்கின்ற பையனைக் கூட்டிக்கொண்டு வா!" என்றார். அட்டெண்டர் போனார். நாலாம் வகுப்பு ஆசிரியரைப் பார்த்து. பாலு என்கின்ற பையன் எங்கே? என்றார். "அவன் இன்றைக்கு வகுப்புக்கு வரவில்லையே?" என்றார் ஆசிரியர். "ஏன்?" என்று கேட்டார் இவர்."பாவம்... அந்தப் பையனுடைய தாத்தா இறந்து விட்டாராம்... அதுதான் அழுதுகொண்டே வந்து சொல்லிவிட்டுப் போனான்!" என்றார் அவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதானியங்கள் எமது வாழ்வில் ஆரோக்கியத்திற்கு அவசியமானவை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

சிறுதானியங்கள் (Minor millets) என்பவை எமது வாழ்வியலில் இரண்டறக்கலந்தவை என்றால் மிகையாகாது. இவற்றிற்கான முக்கியத்துவத்தை நாம் முழுமையாக கொடுத்தாலன்றி எமது தேகாரோக்கியத்தை மேன்மைப்படுத்துவதும் நிலை பேறாக்குவதும் நடைமுறையில் சாத்தியமற்றவையாகும். சிறு தானியங்கள் என்றாலே ஒரு அலட்சியப்போக்கு நம்மவர்களிடையே காணப்படுவது கவலைக் குரியது. கோதுமைமாவையும் சோளம் மாவையும் அரிசி மாவையும் அரிசியையும் நாம் உண்ணப் பழகிவிட்டதனால் சிறுதானியங்களுக்கான முக்கியத்துவத்தை எமது அனுட்டானங்களிலும் பூஜைகளிலும் கிரியைகளிலும் மட்டும் உள்வாங்கி கொள்கின்றோம். எம்முடனிருந்து இறந்துவிட்டவர்களின் ஆன்மாவுக்கான சாந்தியின் போது இவற்றை நாம் பொதுவாக பயன்படுத்துகின்றோமே தவிர உணவுக்காக பயன்படுத்துவது அருகிவிட்டது.

வானிலை ஆய்வு பதிவுகள் காலநிலை மாற்றத்தை அனுமானித்து அதனால் ஏற்படப்போகும் அனர்த்தங்களை பட்டியலிட்டுள்ளன. அந்தவகை தொழில்நுட்ப காலத்தினுள் நாம் பயணித்தாலும் இவ்வனைத்துச் செய்திகளும் அனைத்து மக்களையும் சென்றடைவதில்லை. வீட்டுக்கொரு தொலைபேசி என எமது வாழ்க்கை நகர்ந்து கொள்கையில் மொபைல் தொழில் நுட்பத்தின் வாயிலாக அவசரமான அத்தியாயமான செய்திகளை மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும்.

2025-26 ஆம் வருடம் எமக்கான சோதனைக் காலம். உணவுப் பஞ்சம் என்பதனை பரீட்சிக்கும் காலமாகவும் அவற்றையும் தாண்டி அனைவருக்குமான சமமான உணவு, போசாக்கான உணவு மற்றும் சுகாதாரமான உணவு என்பன கிடைப்பதில் நாம் பல இடர்களை சந்திக்கவேண்டியிருக்கும். உற்பத்தியின் தளம்பல் இதற்கான முக்கிய காரணமாகவும் இதனால் உணவுப்பொருட்களின் கிடைக்கும் தன்மையில் பற்றாக்குறை ஏற்பட அது உணவுப் பொருட்களின் தரத்தை குறைப்பதுடன் அவற்றின் விலையும் மேலும் எகிறும் நிலையேற்படலாம். இந்நிலைமைகளனைத்தும் எமது கவனக்குறைவாலும் சரியான திட்டமிடலின்மையாலும் நிகழவாய்ப்புண்டு.

**விலைத் தளம்பலையும் எகிறலையும் சமாளிக்க ...**

உணவுப்பொருட்களின் விலையேற்றம் மூன்று நான்கு மடங்கால் எகிறும் போது அதனை வாங்கி பயன்படுத்தும் சக்தி சராசரி குடும்பத்திற்கு இல்லாது போகின்றது. நடுத்தர மற்றும் கீழ்த்தர மக்களின் குடும்ப வருமானம் இந்த விலையெகிறலை சமாளிக்க போதாது. உயர்நிலை மக்களால் கூட சமாளிக்க முடியாத நிலை வரலாம். அன்றாடம் தொழில்செய்து தமது குடும்பத்திற்கு உணவளிப்போரின் நிலை கவலைக்கிடமாகும். அதே நேரத்தில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் இன்னமும் இந்த இடரில் சிக்கித் தவிப்பதனை தவிர்க்க முடியாமல் போய்விடும். குடும்ப வருமானத்தை முழுமையாக உணவை பெறுவதில் செலவழிக்கும் நிலை வரும் போது குடும்பத்தின் ஏனைய தேவைகளுக்கு அவர்களால் எதனையும் செய்யமுடியாதவர்களாகிவிடுவர். தனிமனித மற்றும் குடும்ப வருமானத்தை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை அனைத்து மட்டத்திலும் முன்னெடுத்தல் மிக அவசியமானதாகும்.

**சிறுதானிய சுயசார்பு உற்பத்தியும் சுயவருமானமும்.**


சுயஉற்பத்தியை ஊக்குவிக்கும் பல செயற்பாடுகளை குறிப்பாக சிறுதானிய உற்பத்தியை விவசாயத் திணைக்களம் தொடங்கி பல அமைச்சுக்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றமை ஒருபக்கம் ஆறுதலைத் தந்தாலும் இன்னொரு பக்கம் இவ்வனைத்து சேவைகளும் தொடர்ச்சியாக உணவு உற்பத்தியில் ஈடுபாடு காட்டுதல் அவசியம் என்பதனை அனைவரும் தற்போது ஏற்றுக்கொள்கின்றனர் என்பதுவும் இச்சிறுதானியங்கள் தற்போது பொதிசெய்யப்பட்டு விற்பனைக்கு வந்திருப்பதுவும் ஆறுதல் தரும் செய்திகளாகும். நாடளாவிய பொருளாதார சீர்குலைவின் தாக்கம் தற்போதும் வறுமைக்கோட்டிலிருக்கும் குடும்பங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதன் காரணமாக ஏற்பட்ட குடும்ப பொருளாதார சீர்குலைவினால் குடும்பமொன்றின் உணவு தவிர்ந்த மற்றய செலவுகளை ஈடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில் அனைவரும் தத்தமது குடும்பங்களை காப்பாற்றிக் கொள்ள முயற்சியெடுக்கும் நிலைக்கு வந்திருக்கின்றனர். இதில் எமக்காக இலகுவில் உற்பத்தி செய்து பயன்படுத்தக் கூடியதும் தேகாரோக்கியம் மிக்க சிறு தானிய உணவு வகைகளை நாமாகவே வளர்த்தெடுத்து பின்னர் அவற்றை உணவாக்கும் செயற்பாட்டுடன் வருமானம் ஈட்டும் தொழிலாகவும் அதனை மேம்படுத்திக் கொள்ளலாம். இந்த வகையில் சிறுதானிய விவசாயம் பற்றிய கலந்துரையாடல்கள் மக்களுக்கான தெளிவுபடுத்தல்கள், சிறுதானிய விதைகளை கொள்வனவு செய்வது பற்றிய விபரங்கள், அவற்றை விளைவித்தலும் அறுவடை செய்தலும் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

**சிறுதானியங்களின் மகிமையும் ஊட்டச்சத்தும்**

சுயஉற்பத்தியில் பல பயிர்கள் உள்நாட்டிலேயே விளைவிக்க முடியும். குறிப்பாக சிறுதானியங்களை நாம் இன்னும் விரிவாக அதிகளவில் உற்பத்தி செய்யலாம். அதிகளவில் விளைச்சலுக்கான உள்ளீடுகள் தேவைப்படாத, கிடைக்கும் ஈரப்பதனை வைத்து உற்பத்தி செய்வதற்கான தொழில் நுட்பத்தினுள் இருந்தாலும் நாம் அனைவரும் எமது தேவையை உணர்ந்து அதற்கான மாற்று வழிகளை பரிந்துரைத்து உற்பத்தியை ஊக்குவிக்கலாம். எமது பிரதேசத்தில் சிறுதானியங்களான தினை, சாமை, வரகு, பனிவரகு, குதிரைவாலி மற்றும் தானியங்களான கம்பு, சோளம், மக்காச்சோளம் என்பனவற்றை உற்பத்தி செய்து உணவாக்கலாம். ஆனால் இவ்வாறான சிறுதானியங் களை நாம் சேமித்து, கால நிலை யறிந்து அவற்றை உற்பத்தி செய்ய லாம்.

சிறுதானியங்கள் ஏனைய தானியங்களை விட அதீத சக்தியும் ஊட்டச்சத்தும் கொண்டவை. அதிலும் குறிப்பிடத்தக்களவு புரதமும் ஏனைய கனிமங்களையும் கொண்டிருக்கின்றன. இவற்றில் குறைந்தளவு பைற்றிக் அமிலமும் அதிகளவிலான சமிபாடடையாத நார்ச்சத்துக்களும் நிறையவே உண்டு. இதனால் இவற்றை நீரிழிவு நோயாளிகள் தொடங்கி இதய நோய் உள்ளவர்கள் வரை உணவாகக் கொள்ள பரிந்துரைக்கப்படுகின்றன. மேலும் இவற்றில் கல்சியம், இரும்புச்சத்து, இன்னும் பல ஊட்டச்சத்துக்கள் இருக்கின்றன. அவசியமற்று கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம், இரும்புசத்து என குளிகைகளாக நாம் உட்கொள்ளுவதை தவிர்த்து அன்றாட உணவில் சேர்த்துக் கொண்டால் எமது தேகாரோக்கியத்தை தொடர்ந்தும் நாம் இயற்கை வழிமுறை பேணிக்கொள்ள முடியும். முக்கியமாக நோயெதிர்ப்பு சக்தியும் இயற்கையாகவே எமக்குள் உருவாவதற்கு சிறுதானிய உணவினை நாம் அவசியமான உணவாக்கி அவற்றினது உற்பத்தியை ஊக்குவித்து அனைத்து சிறுதானியங்களும் இலகுவாக கிடைக்கச் செய்தல் அவற்றை உணவாக்குவதற்கு உந்துதலாக அமையும்.



சிறுதானியங்கள் ஊட்டச்சத்து நிறைந்தவை. அவற்றினை உட்கொள்வதன் மூலம் எமக்கேற்படும் ஊட்டச்சத்து குறைபாட்டை இலகுவாக இயற்கைவழியில் நிவர்த்தி செய்து கொள்ளலாம். தினையில் அதிகளவில் காபோதரேற்று மற்றும் நெல்லைவிட இரண்டு மட ங்கு புரதச்சத்தும் உள்ளது. மேலும் இதில் செப்பு மற்றும் இரும்புச்சத்தும் உள்ளன. வரகு அதிகளவில் புரதம் மற்றும் நார்ச்சத்துடன் குறைந்தளவில் கொழுப்பும் கொண்டிருக்கின்றது. இதில் அதிகளவில் விற்றமின் பி சத்தும் நியாசின், பிரிடொக்சின் மற்றும் போலிக்அமிலமும் (Folic acid) காணப்படுகின்றது. இத்துடன் கல்சியம், மக்னீசியம், இரும்பு, பொட்டாசியம், துத்தம் என்பன உள்ளன. இதில் அதிகளவில் லெசித்தின் காணப்படுவதுடன் நரம்புத் தொகுதியின் விருத்திக்கு மிகவும் நல்லது.

குதிரைவாலியில் அதிகளவில் நார்ச்சத்தும் இரும்புச்சத்தும் காணப்படுவதுடன் காமா அமினோ பியூட்டிரிக் அமிலம், பீற்றா குளுக்கோன் என்பன இருப்பதனால் நிறைவான அன்ரிஒட்சிடென்களாக (Antioxidents) தொழிற்படும் தன்மையுடையது. அத்துடன் இரத்தத்திலுள்ள கொழுப்பை குறைக்கும் தன்மையும் கொண்டது. சாமையில் அதிகளவு இரும்புச் சத்து உள்ளது. அத்துடன் சிறந்த அன்ரிஒட்சிடன்களையும் கொண்டிருக்கின்றதனால் இயற்கையான நோயெதிர்ப்பு சக்தியை உடலுக்கு கொடுக்கும் தன்மையுடையது. அத்துடன் 38 சதவீதம் சமிபாடடையாத நார்ச்சத்தையும் கொண்டிருக்கின்றது. பனிவரகு அதிகளவிலான புரதச்சத்தைக் கொண்டிருக்கின்றது. இலகுவில் மங்கனீசுசத்தை வழங்கக்கூடியது. அத்துடன் அதிகளவில் கல்சியத்தைக் கொண்டிருப்பதனால் எலும்புகளின் விருத்திக்கு உகந்தது. இரத்தத்தில் உள்ள கொழுப்பினைக் குறைப்பதனால் இதய நோய்கள் வராமல் பாதுகாக்கும் தன்மையுடையது.

இவ்வாறான பல அனுகூலங்களைக் கொண்டுள்ள சிறுதானியங்களுக்கான முக்கியத்துவத்தை கொடுத்து அவற்றை உற்பத்தி செய்து அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் மிக முக்கியம். அவற்றை எமது உணவில் ஏதோ ஒரு வகையில் சேர்த்துக் கொண்டால் எமது உடலுக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் கனிமங்களையும் இயற்கையாகவே உணவுடனேயே பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் உண்டு. நோயெதிர்ப்பு கொண்டு சுகதேகியாக நாம் சிறுதானியங்களை உற்பத்தி செய்து உணவாகக் கொள்ளுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 890





அவற்றில் இரண்டு கைகளுக்கு மத்தியில் இருந்த இடைவெளி வழியாக அந்தச் சிற்ப மண்டபத்துக்குள் தான் பிரவேசித்திருப்பதைத் தெரிந்து கொண்டாள். கைலையங்கிரிக்கு அடியில் அப்படி ஒரு பாதை இருக்கிறதென்பது சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு ஒரு நாளும் தெரியாது. அதன் அடியில் இறங்கிப் பார்க்கலாம் என்ற எண்ணமும் யாருக்கும் தோன்றாது. சமயத்தில் ஒளிந்து கொள்ளுவதற்குக் கூட அது சரியான மறைவிடந்தான்.

சில மணி நேரம் அந்தச் சிற்பச் சுரங்கப்பாதையின் அதிசயத்தைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மந்தாகினி அச்சிற்ப மண்டபத்தைச் சுற்றினாள். வெளிச்சம் மிகக் குறைவாயிருந்த போதிலும் இரவில் பார்த்துப் பழக்கமுற்ற அவளுடைய கூரிய கண்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரிந்தன.

ஓரிடத்தில் சோழ குலத்து முன் னோர்களில் ஒருவரான சிபிச் சக்கரவர்த்தி புறாவின் உயிரைக் காக்கத் தம் உடலின் சதைகளை அறுத்துக் கொடுக்கும் காட்சி சிலை வடிவத்தில் இருந்தது. சிபியின் வம்சத்தில் பிறந்தவர்களானபடியினால் அல்லவோ சோழர்களுக்குச் 'செம்பியன்' என்னும் பட்டம் உரியதாயிற்று? அந்தச் சிற்பத்தைக் கூர்மை யாகக் கவனித்துப் பார்த்த பிறகு ஊமைராணி அப்பால் சென்றாள்.

பிரம்மாண்டமான சிவ பெருமானுடைய சிரஸிலிருந்து கங்கை நதி கீழே விழும் காட்சி ஒரு சிற்பத்தில் அமைந்திருந்தது. அருகில் பகீரதன் கைகூப்பிய வண்ணம் நின்று கொண்டிருந்தான். கீழே விழுந்த பகீரதி நதி ஒரு பிரம்மாண்டமான ரிஷியின் வாய் வழியாகப் புகுந்து, காது வழியாக வெளியேறியது. அப்படி வெளியேறிய கங்கையில் ஒரு சிறிய முனிவர் தண்ணீர் கமண்டலத்தில் மொண்டு கொண்டிருந்தார்.

அவர்தான் குறு முனிவர் என்று பெயர் பெற்ற அகஸ்தியராக இருக்க வேண்டும். அந்தக் கமண்டலத்தை அவர் இன்னொரு சிறிய மலையின் மீது கவிழ்த்தார். கமண்டலத்திலிருந்து பெருகிய நதி வரவரப் பெரிதாகிக் கொண்டு சென்றது. இந்தச் சிற்பக் கங்கையிலும் காவேரியிலும், அவற்றை அமைத்த போது தண்ணீர் பெருகுவதற்கும் ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

ஆனால் இப்போது அவற்றில் தண்ணீர் இல்லை. காவேரி நீண்டு வளைந்து மலைப் பாறைகளின் வழியாகவும் மரமடர்ந்த சோலைகளின் வழியாகவும் சென்றது.

அதன் இருபுறமும் அநேக சிவன் கோயில்கள் இருந்தன. கடைசியாகக் காவேரி கடலில் கலக்க வேண்டிய இடத்தில் அந்தச் சிற்ப மண்டபத்தின் மதில் சுவர் இருந்தது.


ஏதோ சந்தேகப்பட்டு ஊமை ராணி அந்த இடத்தில் மதில் சுவரில் கையை வைத்து அமுக்கினாள் சிறிய கதவு ஒன்று திறந்தது. அதன் வழியாக வெளியேறிய இடம் அரண்மனைத் தோட்டம். அதற்கு அப்பால் வெகு சமீபத்தில் அரண்மனையின் உன்னதமான மாடங்கள் காணப்பட்டன. சுற்றுமுற்றும் பார்த்தாள் மயங்கிய அந்தி மாலையின் வெளிச்சத்தில் தோட்டத் தில் யாருமில்லை என்று தெரிந்தது.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## விருந்தோம்பல்



அயரன்புரம் என்ற ஊரின் அருகே பெரிய காடு இருந்தது. அந்தக் காட்டில் கொடிய வேடன் ஒருவன் வசித்தான். ஒரு நாள் காட்டில் பெரும் புயல் அடித்தது.

பயங்கர மழையும் பெய்தது. இடியும், மின்னலும் பயங்கரமாக இருந்தது.

காடு எங்கும் பயங்கர வெள்ளமாக காட்சியளித்தது. மேடும் பள்ளமும் தெரியாத அளவு காட்டில் வெள்ளம் பெருகி இருந்தது.

அந்தக் காட்டில் பாதை தெரியாமல் குளிரில் நடுங்கியபடியே வேடன் நடந்து கொண்டிருந்தான். மழையிலும் புயலிலும் அடிபட்டு ஒரு பெண் புறா தண்ணீரில் விழுந்து கிடந்தது. பாவம் அது குளிரில் நடுங்கி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது.

வேடன் அந்த புறாவை கண்டுவிட்டான். அதை எடுத்து தன் பைக்குள் போட்டுக் கொண்டு ஒரு மரத்தடியில் வந்து அமர்ந்தான்.

அந்த மரத்தில் புறா ஒன்று வெகு நாட்களாக குடும்பம் நடத்தி வந்தது. அப்போது காட்டில் ஆண் புறா மட்டுமே இருந்தது. இரை தேடி வெளியே பறந்து சென்ற பெண் புறா இன்னும் திரும்பி வரவில்லை. எனவே, ஆண் புறா கவலையுடன் தன் மனைவியான பெண் புறாவைத் தேடிக் கொண்டிருந்தது.

பெண் புறாவோ வேடனிடம் அகப்பட்டுக் கொண்டது. அது மரத்தடியில் அமர்ந்திருந்த வேடனின் பைக்குள் கிடந்து தவித்துக் கொண்டிருந்தது.

ஆண் புறா அழுது கண்ணீர் வடிப்பதை அது கேட்டு மனம் குமுறியது.

"அய்யோ என் அருமைக் கணவரே. நான் வேடனிடம் சிக்கிக் கொண்டுள்ளேன். என்னை நினைத்து நீங்கள் புலம்ப வேண்டாம். நாம் உயர்ந்த நிலையை அடைய வேண்டும். செயலாலும் எண்ணத்தாலும் நாம் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். நாம் அன்புடன் வாழ்ந்த மரத்தடியில் இந்த வேடன் தஞ்சமாக வந்து தங்கியுள்ளான்.

அவன் எத்தகைய கொடியவன். ஆனாலும் நம்மால் விருந்தோம்பப் பட வேண்டியவன்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த மாத்திரத்திலேயே அனைத்தையும் எடுத்து விடாதீர்கள். அனைவற்றையும் ஆதாரத்துடன் எடுத்துக் கொள்ளுங்கள். – சார்ல்ஸ் டார்வின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்சி அரசியல் ஒழிந்து தனிநபர் அரசியல் மேலெழுகிறதா?

ஊழல் ஒழிப்புத் தொடர்பில் அநுர குமார திஸாநாயக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கையில் நிறைவேற்று அதிகாரத்தில் இருந்த ஒருவர் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டார். அவர் யார் என வினவினால், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என எவரும் கூறுவர்.

சொந்தத் தேவையின் பொருட்டு வெளிநாட்டுக்குச் சென்ற ரணில் விக்கிரமசிங்க, அரச நிதியில் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதிகள் என்ற பட்டியலில் மலைவிழுங்கியவர்கள் இருக்கும்போது, ரணில் விக்கிரமசிங்கவை மட்டும் அவசரஅவசரமாகக் கைது செய்தது ஏன்? என்ற கேள்வி எழவே செய்யும்.

உண்மையில் ஜனாதிபதி ஒருவர் தனது பதவிக் காலத்தில் தனது சொந்தத் தேவையின் பொருட்டாயினும் அரச நிதியில் வெளிநாடு செல்வதென்பது பாரதூரமான குற்றமா? என்ற வினாவை எழுப்பினால், அது குற்றமல்ல என வாதிடுவதற்கும் பலர் இருப்பர்.

இது அநுர அரசாங்கத்துக்கும் நன்கு தெரியும். இருந்தும் இந்த நாட்டில் ஆட்சியில் இருந்தவர்கள் செய்த ஊழல்கள், மோசடிகள் தொடர்பில் கைதுகளை துரிதப்படுத்துவதாக இருந்தால், சிறிய குற்றத்தில் தொடங்கி பெரிய குற்றம் வரை விசாரணைகளை முன்னெடுப்பதுதான் முறை.

ஆக, ஊழல் குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே கைது செய்யப்பட்டாரெனில், ஏனையவர்கள் எம்மாட்டு என்ற நிலைமை இப்போது ஏற்பட்டு விட்டது.

தவிர, மிகமோசமான குற்றங்கள் செய்தவர்களை முதலில் கைது செய்தால், ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டுச்சேருவர்.

இது விளக்கம் – விசாரணை என்ற முன்னகர்வுகளுக்கு இடைஞ்சலாக அமையும் என்ற காரணத்தாலும் ரணில் விக்கிரமசிங்க முதலில் கைதானார்.

அவரைக் கைது செய்த பின்பு இப்போது தென்னிலங்கை அரசியலில் அரசுக்கு எதிரான கோசங்களை முன்வைப்பதற்கு எவரும் துணியவில்லை.

இதை இன்னும் தெளிவுபடுத்துவதாயின், ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதற்கு பின்னர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு அரசியலில் தாம் அநாதைகளாகிவிட்டதை உணர முற்பட்டுள்ளனர்.

இதனை உறுதி செய்வது போல, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பௌத்த பீடங்களுக்குச் சென்று பௌத்த பீடாதிபதிகளைச் சந்தித்து அநுரவின் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கையால், இந்த நாட்டைக் காப்பாற்றிய படையினர் அவமரியாதைக்கு ஆளாகின்றனர் என்றும் இது புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் நோக்கத்தை நிறைவேற்றுவதாகவும் உள்ளது எனப் போட்டு வைத்தார்.

நிலைமை இதுவாக இருக்கையில், ரணில் விக்கிரமசிங்க ஒரு முக்கியமான கருத்தை இப்போது முன்வைத்து ஜனாதிபதி அநுரவை மறைமுகமாக முதன்மைப்படுத்தியுள்ளார்.

ஆம், நம் நாட்டில் கட்சி அரசியல் ஒழிந்து தனிநபர்களின் செல்வாக்கே அரசியலில் மேலோங்குகிறது என ரணில் விக்கிரமசிங்க கூறியதற்குள், அவரை முதலில் கைது செய்த வியூகம் அநுர அரசுக்கு பெருவெற்றியைத் தந்துள்ளது எனலாம்.

## வவுனியா மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு இடைக்காலத்தடை

(வவுனியா)

வவுனியா மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு மேல் முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் 19ஆம் திகதி வரை இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

நீதியரசர்கள் ரோஹந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணிக்கு ஆதரவு கோரப்பட்ட போது ஜனநாயக தேசிய முன்னணியின் மேலதிக ஆசனத்தினால் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பரமேஸ்வரன் கார்த்தீபன் பிரதி மேயர் பதவி கோரி ஆதரவளித்திருந்தார்.

எனினும் அவர் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்குட்பட்ட எல்லையில் வசித்த நிலையில் மாநகர சபையில் போட்டியிட்டமை அதனூடாகப் பதவியைப் பெற்றமை சட்ட விதிகளுக்கு மீறிய செயற்பாடு என மாநகர சபை உறுப்பினர்களான தேசிய மக்கள் சக்தியின் சார்பில் க.விஜயகுமாரும் சுயேட்சைக் குழு உறுப்பினரான பிரேமதாஸ் சிவசுப்பிரமணியமும் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதன் பிரகாரம் கடந்த நான்கு தவணைகளின் பின்னர் நேற்று நீதிமன்றத்தினால் மேற்குறித்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மனுவின் விசாரணை முடியும் வரை இடைக்காலத் தடை உத்தரவு அமுலில் இருக்கும் எனத் தெரிவித்துள்ள மன்று குறித்த மனுவை நவம்பர் 19 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் திகதியிட்டுள்ளது.

மனுதாரர்கள் சார்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அடுத்தாண்டு மாகாணசபை தேர்தல் நடப்பது உறுதி

### நீதி அமைச்சர் ஹர்ஷன

மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் நடத்த வேண்டும் என்ற முடிவில் அமைச்சரவையும் உறுதியாக உள்ளது என நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

எந்த முறைமையில் தேர்தல் நடத்தப்படும் என்பது பற்றி இதுவரை முடிவெடுக்கப்படவில்லை.

அதேவேளை புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியால் வழங்கப்பட்ட உறுதிமொழியும் நிறைவேற்றப்படும்.

அதற்கான கால எல்லையைச் சரியாகக் குறிப்பிட முடியாது என்றார். (ம-7)

## தண்ணீரை அதிக விலைக்கு விற்ற வர்த்தக நிலையத்திற்கு அபராதம்

(பொத்துவில்)

அரச கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை விற்பனை செய்த குற்றச்சாட்டில் பொத்துவில் அறுகம்பே பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு பொத்துவில் நீதவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்து உத்தரவிட்டது.

1.5 லீற்றர் குடிநீர் போத்தலின் கட்டுப்பாட்டு விலை ரூபா 130/= ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வர்த்தக நிலையம் அதனை ரூபா 150/= இற்கு விற்பனை செய்ததாக நுகர்வோர் விவகார அதிகார சபை வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றஞ்சாட்டப்பட்ட வர்த்தக நிலையம் நீதிமன்றத்தின் முன் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டது.

இதனையடுத்து நீதவான் குறித்த வர்த்தக நிறுவனத்திற்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ம-7)

## மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு இளஞ்சிவப்பு உடையில் எம்.பிகள்

(கொழும்பு)

உலகளாவிய மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இன்று புதன்கிழமை (22) இளஞ்சிவப்பு நிற ஆடைகளை அணிய வேண்டும் என சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன அறிவித்துள்ளார்.

அதேவேளை பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள்குழு அனைத்து உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் நுழைவாயிலில் ஒரு விழிப்புணர்வுச் சின்னத்தை விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் பாராளுமன்றத்தின் தகவல்திணைக்களம்வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## ருஹூணு பல்கலைக்கழக மோதல் கைதான மாணவர்களுக்கு மறியல்

ருஹூணு பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற மோதலில் ஆறு பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மாணவர்கள் குழுவை எதிர்வரும் 28 ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்க மாத்தறை நீதவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின் மதிப்பெண்கள் தொடர்பிலான கருத்து வேறுபாடு காரணமாக ருஹூணு பல்கலைக்கழக விவசாயப் பீடத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடு சுமுகமாகத் தீர்க்கப்பட்ட போதும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (20) மீண்டும் பதற்றங்கள் அதிகரித்து அது ஒரு மோதலாக மாறியுள்ளது. மோதலில் ஆறு மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்நிலையிலேயே மோதல்தொடர்பில் கைது செய்யப்பட்ட மாணவர்களை மாத்தறை நீதவான் நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## கந்தசஷ்டியை முன்னிட்டு நல்லூரில் வீதித்தடை

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரத காலம் இன்று (22) புதன்கிழமை ஆரம்பமாகும் நிலையில் நல்லூர் கந்தசாமி ஆலயச் சூழலில் வழமை போன்று யாழ்ப்பாண மாநகர சபையினால் தற்காலிக வீதித் தடைகள் அமைக்கப் பட்டுள்ளன.

அதன்பிரகாரம் இன்று தொடக்கம் 25 ம் திகதி சனிக்கிழமை வரை மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரையும் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி தொடக்கம் 6.00 மணி வரையும் சூரன் போர் உற்சவ தினமான திங்கட்கிழமை 27ம் திகதி நண்பகல் 12.00 மணி முதல் இரவு 7.00 மணி வரையும் மறுநாள் (28) மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரையும் என்ற ஒழுங்கில் குறித்த வீதித் தடையானது அமுலில் இருக்கும் என யாழ்.மாநகர சபையின் முதல்வர் திருமதி மதிவதனி அறிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

28

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

சிறுபான்மையினர் விசேடமாக, தமிழ் மக்கள் சார்பில் சாட்சியம் கொடுத்த இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (Ceylon Tamil Congress), டொனமூர்த் திட்டம் அமுலிலிருந்த காலத்தில், சிங்கள ஆட்சியாளர், தமிழருக்கும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கும் வஞ்சகம் செய்தனர் என எடுத்துக் கூறினர். நாட்டின் வருவாயைப் பங்கீடு செய்தல், உத்தியோகத்தர் நியமனம் எனும் துறைகளில் பாரபட்சம் காட்டப்பட்டதென்று அவர்கள் எடுத்துக் காட்டினர்.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் G. G. பொன்னம்பலம் "சம பலப் பிரதி நிதித்துவம்" அல்லது "50 இற்கு 50" என்ற திட்டத்தை விசாரணைச் சபையினரின் ஆலோசனைக்குச் சமர்ப்பித்தார். விசாரணைச் சபையினர், குற்றச் சாட்டுக்களையும் மாற்றுத் திட்டத்தையும் ஏற்க மறுத்து விட்டனர். அவர்கள் விசாரணையை முடித்துக்கொண்டு, 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 ஆம் நாள் இங்கிலாந்து போய்ச் சேர்ந்தனர்.

**சோல்பரி யாப்பு - 1947**

இலங்கை அமைச்சர்களால் வரையப்பட்ட யாப்பில் காணப்பட்ட சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு 1947ஆம் ஆண்டு சோல்பரி யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

### சோல்பரி யாப்பின் முக்கிய அம்சங்கள்

ஆளுநர் பதவி இல்லாமலாக்கப்பட்டு ஆளுநர் நாயகம் (தேசாதிபதி) எனும் பதவி ஏற்படுத்தப்பட்டது. பிரித்தானிய முடியின் பிரதிநிதியான ஆளுநர் நாயகம் ஒரு பெயரளவிலான நிர்வாகியாவார். செனட் சபை, பிரதிநிதிகள் சபை எனும் இரு மன்றங்களைக் கொண்ட பாராளுமன்றம். பிரதமர் தலைமையிலான அமைச் சரவை ஆட்சி. அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவும் நீதிச் சேவை ஆணைக் குழுவும் உருவாக்கப்பட்டன.

சோல்பரி அரசியல் யாப்பின்படி இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாட்சி முறையின் நிர்வாகத்துறை பிரதமர் தலைமையிலான அமைச்சரவையிடம் காணப்பட்டது. பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மை அங்கத்தவரின் ஆதரவைப் பெற்ற ஒருவர் ஆளுநர் நாயகத்தால் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அமைச்சரவை (கெபினட்) பிரதமரின் விருப்பத்தின்படி உருவாக்கப்பட்டது. அவர்களில் இருவர் அல்லது இரண்டிற்கு மேற்பட்டோர் செனட் சபையிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டியதோடு அவர்களில் ஒருவர் கட்டாயமாக நீதியமைச்சராயிருக்க வேண்டும்.

ஏனைய அமைச்சர்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்படுவதுடன் பாதுகாப்பு அமைச்சும் வெளிவிவகார அமைச்சும் பிரதமரின் கீழே செயற்படவேண்டும் என்பது கட்டாயமாகும்.

### சிறுபான்மையினர் பிரச்சினை :

தடைகளின்றி அதிகார உரிமைகளைப் பெரும்பான்மையினர் கைகளிற் கொடுப்பதால் சிறுபான்மையினருக்கு ஆபத்தான நிலைமை ஏற்படுமெனச் சிறுபான்மைத் தலைவர்கள் எழுப்பிய குரலிற்குச் சோல்பரி விசாரணைச் சபையினர் செவிமடுத்தனர். அவர்கள், தம் திட்டத்தில், சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்கும் வாயிலாய் பல வழிவகைகளைச் சிபாரிசு செய்தனர். அவர்கள் எடுத்துரைத்த வழிமுறைகள் பெரும்பாலும் இலங்கை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டிருந்தன. அவை யாவன :

(i) சிறுபான்மையினருக்கு நியாயமான அளவில் பிரதிநிதிகள் இடமளித்தற் பொருட்டு, அவர்களது பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டம் சேர்க்கப்பட்டது. அதனுடன் பல உறுப்பினர் தொகுதிகளும் சிபாரிசு செய்யப்பட்டன.

(ii) தேசாதிபதி நாயகம் பொதுத் தேர்தலின் பின், ஒரு முக்கியமான பிரிவினர் பிரதிநிதித்துவம் பெறும் பட்சத்தில், ஆறு உறுப்பினருக்கு மேற்படாதவரை, நியமனம் செய்யலாம்.

(iii) அரசியலமைப்பை மாற்றும் திட்டம், முழுச் சபையின் மூன்றிலிரண்டு பகுதியினரின் சம்மதத்தைப் பெறல் வேண்டும்.

(iv) சிறுபான்மையினருக்கு, அவர்களது எண்ணிக்கைக்கேற்ற பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கும், அவசரமாயும் தீமையான எண்ணத்துடன் நிறைவேற்றப்படும் சட்ட திட்டங்களை திருத்தியமைக்கவும், மேற்சபை நிறுவப்படல் வேண்டும்.

(v) அரசியலமைப்பின் இருபத்தொன்பதாம் பிரிவின் உட்பிரிவுகளாகிய இரண்டிலும் மூன்றிலும் (29(2-3)) சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன: 29(2) ஆம் பிரிவின் படி பாராளுமன்றத்தினாலாக்கப்படும் எந்தச் சட்டமும்

- எந்தச் சமயத்தினதும் சுயமான செயல் முறையைத் தடுக்கவோ அன்றிக் கட்டுப்படுத்தவோ கூடாது.

- பிற இனங்களையோ அல்லது சமயங்களையோ சேர்ந்தவர்களைப் பாதிக்காத இடையூறுகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும், ஒரு தனிப்பட்ட இனத்தை அல்லது சமயத்தைச் சேர்ந்தவர்களை உட்படுத்தக் கூடாது.

- பிற இனங்களுக்கு அல்லது சமயங்களைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்படாத நயம் அல்லது பிரயோசனம், ஒரு குறிப்பிட்ட இனத்துக்கு அல்லது சமயத்தைச் சேர்ந்தவருக்கு அளிக்கக் கூடாது.

- எந்தவொரு சமயக் குழுவின் அமைப்பையும், அக்குழுவை ஆள்வோர் சம்மதமின்றி மாற்றியமைத்தல் கூடாது. ஒரு சமயப்பிரிவு சட்டத்தினால் இணைக்கப்பட்டிருப்பின், அக்குழுவின் பராமரிப்பு அதிகாரத்தின் வேண்டுகோளின் படியே, அதனமைப்பு முதலியன மாற்றப்படலாம். 29(3) ஆம். பிரிவின் படி, மேற்குறிப்பிட்ட உபபிரிவின் சரத்துக்கு முரணாக ஆக்கப்பட்டவை செல்லுபடியாகா.

(vi) அரசாங்க சேவை ஆணைக்குழு, அரசாங்க உத்தியோகத்தரை நியமனம் செய்வதில் எல்லாச் சமூகத்தினருக்கும் நடுநிலை கோணாது செயலாற்றும் என நம்பப்பட்டது.

இவை தாம், சிறுபான்மையினரின் நலவுரிமைகளைப் பாதுகாத்தற்பொருட்டு, சோல்பரி விசாரணைச் சபையினர் செய்த காப்பீடுகளாகும். இவ்வேறுபாடுகளிலும் மேலாக, பெரும்பான்மையினர், தம் கைகளிலொப்படைக்கப்பட்ட அதிகாரத்தை விரும்பத்தக்க வகைகளிற் பயன்படுத்துவதால் தான், சிறுபான்மையினரின் நம்பிக்கையைப் பெறலாம் என்றும், இப்பொறுப்புணர்ச்சியைப் பெரும்பான்மையினர் காட்டுவர் எனத் தாம் நம்புவதாகவும், சோல்பரிக் குழுவினர் தமது அறிக்கையில் (பகுதி 178) கூறிப்போயினர். ஆனால் சோல்பரிக் குழுவினரின் நம்பிக்கைகள் வீண்போனமையைப் பின் வந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டும்.

புதிய யாப்பின்படி 1947 ஒகஸ்ட் மாதம் இலங்கையில் பொதுத் தேர்தல் ஒன்று நடாத்தப்பட்டது. அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் டி. எஸ். சேனாநாயக்க அவர்கள் முதலாவது பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். இக்காலத்தில் சேர் ஹன்றி மங்மேசன்மூர் ஆளுநர் நாயகமாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

1947 சோல்பரி யாப்பின்படி பிரித்தானிய மகாராணியே இலங்கையின் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஆளுநர் நாயகம் மகாராணியின் பிரதிநிதியாக அவராலேயே நியமனம் செய்யப்பட்டார். மகாராணியின் சார்பில் ஆளுநர் நாயகத்தால் ஆற்றப்பட வேண்டிய நிர்வாக நடவடிக்கைகளை அமைச்சரவையே மேற்கொண்டது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு முழுவதும்...

டங்களும் மாகாணப் பாடசாலைகளில் 34,677 வெற்றிடங்களும் அடங்குவ தாக அவர் குறிப்பிட்டார்.

மாகாண ரீதியில் பார்க்கும்போது மேல் மாகாணத்தில் அதிகபட்சமாக 6 ஆயிரத்து 318 வெற்றிடங்களும் வடக்கில் ஆயிரத்து 568 வெற்றிடங் களும் வடமேல் மாகாணத்தில் 3 ஆயிரத்து 271 வெற்றிடங்களும் கிழக் கில் 4 ஆயிரத்து 630 வெற்றிடங்களும் காணப்படுவதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

தேசிய பாடசாலைகளில் விஞ்ஞா னம், கணிதம், வெளிநாட்டு மொழி கள், தொழில்நுட்பம் ஆகிய பாடங் களுக்காகவும் உயர்தர வகுப்புகளில் பட்டதாரிகள் சிங்களம், தமிழ், ஆங்கி லம் ஆகிய மொழிகளில் நிலவும் வெற்றிடங்களுக்காக 2024 ஜூலை 28ஆம் திகதி முதல் ஆட்சேர்ப்புச் செய் யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் இரு மாதங் களில் 353 பட்டதாரிகளும் ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படவுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஆசிரியர் சேவையில் நில வும் வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்காக பிரதமரின் செயலாள ரின் தலைமையில் நியமிக்கப்பட் டுள்ள ஆட்சேர்ப்பு மதிப்பாய்வு குழு விடம் கோரிக்கையொன்றை முன் வைத்து வெற்றிடங்களை நிரப்புவதற் காக அடுத்தகட்ட நடவடிக்கை எடுக் கப்படும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (ம-7)

## யாழில் பிறந்து...

தம்பதிகளின் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு கடந்த முத லாம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது.

இந்நிலையில் சிகிச்சைக்காக குறித்த குழந்தையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப் பித்தனர்.

இருப்பினும் குறித்த குழந்தை சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந் துள்ளது.

குழந்தையின் உயிரிழப்புத் தொடர் பான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவா யம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

மூளையில் ஏற்பட்ட கிருமித் தொற் றுக் காரணமாகவே மரணம் சம்பவித் துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனை களில் தெரியவந்துள்ளது. (ம-7,60,104)

## விபரீத...

இதில் நாவற்குழி ஐயனார் கோவி லடியைச் சேர்ந்த கலியுகவரதன் சுருதி (வயது-20) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

குறித்த யுவதி கடந்த 15ஆம் திகதி தனக்குத்தானே தீ வைத்து தற் கொலைக்கு முயற்சித்துள்ளார்.

தீக்காயத்துக்குள்ளான யுவதியை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்ப்பித்துள்ளனர்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி குறித்த யுவதி நேற்றுமுன்தினம் (20) உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவா யம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60,104)

## கசிப்புடன்...

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணப் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரி டம் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ம-7,104)

## செவ்வந்திக்கு...

நீதிமன்றத்தில் வைத்து சுட்டுப் படு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த இஷாரா செவ்வந்தி அண்மையில் நேபாளத் தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட் டன. அதன் அடிப்படையில் கொலைச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் இஷாரா செவ்வந்தி தங்கியிருந்த இடங்க ளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட் டன.

அந்தவகையிலேயே யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த ஏழு பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-7,104)

## பொலிஸாரின்...

என்பவற்றைத் தவிர்க்கும் வகையில் குறித்த சேவை யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமஹா தலைமையில் சம்பிரதாய பூர்வமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த சேவை யைப் பெற்றுக் கொள்ள 021-222 2221 என்ற அவசர தொலை பேசி இலக்கத் திற்கு அழைப் பெடுத்து பொது மக்கள் முறை யிடுவதன் மூலம் பொலிஸார் குறித்த பகுதிக்கு விரைந்து வந்து பிரச்சினைகளை தீர்ப்பர் என பிராந் திய சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் தெரிவித் தார்.

இதேவேளை யாழ்ப்பாணமாவட் டத்தில் உள்ள எந்தப் பகுதியில் இருந்தும் குறி த்த இலக்கத் திற்கு அழைப் பெடுத்து முறை யிட்டால் அந் தந்தப் பகுதி பொலிஸ் நிலை யங்கள் ஊடாக பொது இடங்கள் மற்றும் போக்கு வரத்துக்களின் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக உட னடித் தீர்வைப் பெற முடியும் என வும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-7,33)

## வசா...

காணியில் சட்ட விரோதமான முறையில் இரா ணுவ வைத்திய சாலை அமைக் கப்பட்டுவரும் நிலையில் காணி உரிமையாளரின் கோரிக்கையை ஏற்று தமிழர சுக் கட்சியின் பதில் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந் திரன், தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடமாகாண சபை அவைத் தலைவருமான சி.வி.கே சிவஞானம் மற்றும் வலி.வடக்கு தவிசாளர் சோ.சுகிர் தன் ஆகியோர் காணி உரிமையாள ருடன் நேற்று செவ்வாய்க்கிழமை காணி அமைந்துள்ள பகுதிக்கு நேரில் சென்று, உயர் பாதுகாப்பு வலய எல்லையுடன் நின்று, வைத்திய சாலையின் கட்டட வேலைகளை நேரில் பார்வையிட்டனர்.

அதன் பின்னர் காணி உரிமையா ளருடன் கலந்துரையாடிய எம்.ஏ. சுமந்திரன் இராணுவத்தினரால் மேற் கொள்ளப்படும் வைத்தியசாலை கட்டட வேலைக்கு எதிராக மிக விரை வில் சட்ட நடவடிக்கையை மேற் கொள்ளவுள்ளதாக உறுதியளித்தார். (ம-7,33)


மஹஜன சம்பத
திகதி 2025.10.21
சீட்டிழுப்பு இலக்கம் 5989
Q 8 1 5 1 8 6
அத சம்பத
Q 5 1 8 6
சீட்டிழுப்பு இலக்கம் 0564
National Lotteries Board

சுப தவசக
திகதி 2025.10.21
155
விருச்சிகம் 04 11 36

தன நிதானய
திகதி - 2025.10.21
சீட்டிழுப்பு இலக்கம் - 2019
F 02 05 24 49 F
Double Chance

மெகா பவர்
திகதி 21/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2337
R 16 02 12 18 49

ஜய
திகதி 2025.10.21
சீட்டிழுப்பு இலக்கம் 0257
G 7 2 4 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4231
சீட்டிழுப்பு திகதி 21.10.2025
Q 03 09 22 56
Q

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.21
சீட்டிழுப்பு இலக்கம் 1298
சிம்மம் 22 25 53 62 சிம்மம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.10.2025 வெற்றி வாரம் 0697
K 4 3 4 6 2 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,887,328.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2963
சீட்டிழுப்பு திகதி 2025.10.21 தினம் செவ்வாய்க்கிழமை
18 33 43 47 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,946,672.00

சனிதா
திகதி 21.10.2025 வெற்றி வாரம் 5124
13 26 45 78 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,130,028.00

சசிரி
0796
21.10.2025
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 19 24 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00


ராசி
சீட்டிழுப்பு வாரம் 4675
சீட்டிழுப்பு திகதி 21.10.2025 தினம் செவ்வாய்க்கிழமை
02 24 39 58 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,747,799.60

லக்ன
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 12 09 12 33 47
2139
21.10.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.601,685,722.80

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2789
சீட்டிழுப்பு திகதி : 2025.10.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,323,832.00
11 35 60 69 D


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபைக்கு எஸ்.சுதர்சன் இடமாற்றம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய எஸ். சுதர்சன் வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கடிதத்தின் பிரகாரம் வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றமாகிச் செல்லும் சாம்பசிவம் சுதர்சன் அவர்கள் நேற்று (21.10.2025) அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களிடம் தமக்கான இடமாற்ற விடுவிப்புக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

இவர் யாழ்ப்பாணப் பிரதேச செயல கத்தில் பிரதேச செயலாளராகக் கடமை யாற்றி இன்று (22.10.2025) வடக்கு மாகாண சபையில் தமது கடமையினைப் பொறுப்பேற்கவுள்ளார். (ம-7)

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் புலனாய்வு அதிகாரியை கைது செய்யத்தடை

(கொழும்பு)

ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அமைய, முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரி கே.எஸ். மத்துமகேவை கைது செய்வதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவை நவம்பர் 11ஆம் திகதி வரை நீட்டித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த இராணுவப்புலனாய்வு அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை நேற்று மறுபரிசீலனை செய்த பின்னரே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

சம்பவம் தொடர்பான எந்தவொரு எழுத்து பூர்வ சமர்ப்பிப்புகளையும் நவம்பர் 11ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் மன்று உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7)

# விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

நாட்டில் நிலவிரும் சீரற்ற வானிலையால் ஏற்படும் சுகாதார அவசரநிலைகள் மற்றும் வைத்திய உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு அறிவிக்க, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் துரித தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

24 மணி நேரமும் செயற்படும் வகையில் 077 450 6602 என்ற விசேட துரித தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அவசரநிலைகள் மற்றும் வைத்திய உதவிகள் தேவைப்படுபவர்கள் எந்த நேரத்திலும் மேற்கண்ட எண்ணை அழைக்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ம-7)

## யாழ்.குருநகர்...

மேலதிக விசாரணைகளுக்காக அவர் தங்கியிருந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றார். அந்த வகையில் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டு சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

அந்த வகையிலேயே யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த ஏழுபேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மித்தெனியவில் இருந்து தமிழர் பகுதிக்குச் சென்ற செவ்வந்தி யாழ்ப்பாணத்தில் இரு நாட்கள் தங்கியிருந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த சமயத்தில் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பலைச் சேர்ந்த கெஹல்பத்தர பத்மேயின் வேண்டுகோளுக்கிணங்க சர்வதேச ஆட்கடத்தலில் ஈடுபடும் கும்பலின் உதவியை நாடியுள்ளார்.

அவர்களே செவ்வந்தியை இந்தியாவுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அவர்கள் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த செவ்வந்தியை குருநகர் இறங்குதுறைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த சிறிய மீன்பிடிப்படகில் ஏற்றியுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பயத்தில் அழுது புலம்பிய செவ்வந்தி படகில் பயணிக்கும் போது அழுது கொண்டே சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவிற்கு வேறொரு பெண்ணுடன் ஒரு சிறிய படகில் மேற்கொண்ட பயணம் ஒரு பயங்கரமான அனுபவமாகவும், அது மிகவும் சோர்வான பயணம் என்றும் இஷாரா செவ்வந்தி பொலிஸாரிடம் கூறியதாகக் கூறப்படுகிறது.

பயணத்தின் போது, படகு கவிழ்ந்து, தான் மூழ்கிவிடுவேனோ என்ற பயத்தில் அலறினேன் என பொலிஸாரிடம் கூறியதாகக் கூறப்படுகிறது. (ம-7)

## செவ்வந்தி...

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், பொலிஸாரின் அதிரடி நடவடிக்கைகளினால் இஷாரா செவ்வந்தி குழுவினர் மற்றும் கெஹல் பத்தர பத்மே குழுவினர் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இந்தப் பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள்.இவர்கள் எவரும் தப்ப முடியாது.

சந்தேகநபர்கள் எங்கு மறைந்து இருந்தாலும் கைது செய்யப்படுவார்கள்.

நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படும் நபர்கள் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்.

எவருக்கும் மன்னிப்பு கிடையாது. போதைப்பொருள் வியாபாரிகளிடம் இருந்தும், பாதாள உலகக் குழுவினரிடம் இருந்தும் இந்த நாட்டை மீட்டெடுக்க எமது அரசு சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

உடனடி விற்பனைக்கு
அலுவலகப் பாவனையில் இருந்த Printer, Laptop, Photocopier மற்றும் Scanner உடனடி விற்பனைக்கு உண்டு.
(5704)
077 302 4234

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4161)
076 825 7716 (ஆகாஸ்)

கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4160)
UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2460/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237



ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் சின்னப்பு பத்மநாதன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
திதி: வளர்பிறையில் பிரதமை 22.10.2025
தோற்றம் 07.02.1944
மறைவு 31.10.2016
ஆண்டுகள் ஒன்பதென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவலைகள் என்றும் எம்மைவிட்டு அகலாது நீங்கள் வாழ்ந்து காட்டிய பாதை தன்னில் எமது வாழ்க்கை பயணம் தொடரும்.....
"மிதிலா"
கூவில், புலோலி தென்மேற்கு, புலோலி
உங்கள் நினைவுகளுடன்...
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(1669)



உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுக்கள் விரைவு பொதிகள் சேவைகள் விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4160)
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



யாழ்ப்பாணத்தில் Voyzant
10 பேர் கொண்ட குழுவில் ஒரு நபரிற்கு 185,000/=
தென்னிந்திய ஆலய தரிசனம் 09 இரவுகள்/10 நாட்கள்
தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற 35 இற்கு மேற்பட்ட ஆலயங்கள் (மேலும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கான சுற்றுலாப் பயணங்களும் மேற்கொள்ளப்படும்.)
மேலதிக விபரங்களுக்கு:
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
Voyzant(PVT)Ltd
(C-4109)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ... எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org